# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE — அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 10.12.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# குற்றவாளிகள், கொலையாளிகள் மற்றும் திருடர்களுக்கே பொதுமன்னிப்பு

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு



(காந்தன்)

இலங்கையில் குற்றவாளிகள், கொலையாளிகள் மற்றும் திருடர்களுக்கே பொது மன்னிப்பு வழங்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் சட்டத்துக்கு அப்பால் தமது தனிப்பட்ட சட்டத்தின் நடைமுறைகளாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீதியமைச்சின் நிதியொதுக்கீட்டு விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர், இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு,

02 ஆம் பக்கத்தில்...



## பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுங்கள்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அநியாயமாக கைது செய்யப்பட்டு, சிறையில் வாடும் தமிழ், முஸ்லிம், மற்றும் சிங்களவர்களை விடுதலை செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, இன்றைய தினம் விளையாட்டுத்துறை, தொழில்நுட்பம், சிறைச்சாலை, நீதி உட்பட பல அமைச்சுக்களின் குழுநிலை விவாதத்தில் பேசக்கிடைத்தமைக்கு

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர்களைப் பாதுகாப்பதற்கு கிழக்குத் தீமோரை போன்று சில பொறிமுறைகளை அமையுங்கள்

### ஐ.நா.விடம் வலியுறுத்தல்




(ஜெயந்தன்)

தமிழர்களைப் பாதுகாப்பதற்கு கிழக்குத் தீமோரை போன்று சில பொறிமுறைகளை அமைக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் கேட்பதாக வவுனியாவில் கடந்த 1757 வது நாளாகத் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் போனவர்களின் உறவினர்களின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில்

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் பௌத்தர்களின் அடையாளங்களே வடக்கு,கிழக்கில் இருக்கின்றன

### சார்ல்ஸ் நிர்மலாநாதன் தெரிவிப்பு



(காந்தன்)

தமிழர்கள் பௌத்தர்களாக இருந்தார்கள். எனவே தமிழ் பௌத்தர்களின் அடையாளங்களே வடக்குகிழக்கில் பௌத்த அடையாளங்களாக கண்டறியப்பட்டுள்ளன.இதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வவுனியா வெடுக்குநாரி மலையில் நிறுத்தப்பட்டுள்ள

02 ஆம் பக்கத்தில்...

## கூட்டமைப்பு ஒருபோதும் அரசாங்கத்திற்கு உதவப்போவதில்லை

### நாமல் தெரிவிப்பு



தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒருபோதும் அரசாங்கத்திற்கு உதவப்போவதில்லையென அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற நீதி அமைச்சின் மீதான விவாதத்தில் உரையாற்றிய

02 ஆம் பக்கத்தில்...

## ஒமிக்ரோன் பிறழ்வு இலங்கையில் வேகமாக பரவ சாத்தியமில்லை



(ராஜ்)

ஒமிக்ரோன் பிறழ்வானது தென் ஆபிரிக்காவைப் போன்று இலங்கையிலும் , ஐரோப்பிய நாடுகளிலும் வேகமாக பரவுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகும்.

இலங்கையில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளமையே இதற்கான காரணமாகும் என்று ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும்

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையில் கணவன்மாரால் 128 மனைவியர் கொலை

### ஐ.நா.வெளியிட்டுள்ள அதிர்ச்சி தகவல்



இலங்கையில் கணவன்மாரால் 128 மனைவியர் கொலை செய்யப்பட்டுள்ளதாக அதிர்ச்சி தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியம் மேற்கொண்ட ஆய்வொன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

விபத்துகள், தற்கொலைகள் மற்றும் பெண்கள் என்ற காரணத்துக்காகக் கொலை செய்யப்படுதல் என்ற வகையில் தகவல்களைத் திரட்டும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...






## சிவானந்த தேசிய பாடசாலைக்கு முன்பாக இன்று மாபெரும் போராட்டம்



(மட்டுநிருபர்)

சர்வதேச அமைப்புகளினால் மனித உரிமை ரீதியான குற்றச்சாட்டுகளை கொண்டுள்ள ஒருவர் இலங்கை ஆசிரியர் சங்கத்தினை குற்றஞ்சாட்டுவதற்கு அருகதையற்றவர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட பொதுச்செயலாளரும் கிழக்கு மாகாண இணைப்பாளருமான பொன்னுத்துரை உதயரூபன் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரம் : இந்துக்கள் பொறுமைகாக்க வேண்டும்

### அமைச்சர் விதுர விக்ரமநாயக்க



வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளும் விடயத்தில் நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை இந்துக்கள் பொறுமைக்காக்க

02 ஆம் பக்கத்தில்...











## வடமேல் மாகாண ஆளுநராக வசந்த கரன்னாகோட நியமனம்



வடமேல் மாகாண ஆளுநராக கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமேல் ஆளுநராக

02 ஆம் பக்கத்தில்...

## சிவானந்த தேசிய பாடசாலைக்கு முன்பாக இன்று மாபெரும் போராட்டம்

மட்டக்களப்பில் உள்ள மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சிவானந்தா தேசிய பாடசாலைக்கு முன்பாக ஒருசிலர் முன்னெடுத்த போராட்டத்தின் போது ஆசிரியர் மீது தாக்குதல் நடாத்தியவர்களை கைதுசெய்யுமாறு வலியுறுத்தி நாளை (இன்று) இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் பாடசாலைக்கு முன்பாக மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் சிவானந்தா தேசிய பாடசாலை முன்பாக நடைபெற்ற போராட்டம் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஊடகங்களுக்கு அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தார்.அது தொடர்பில் சில விடயங்களை தெளிவுபடுத்தவேண்டிய அவசியமுள்ளது. சிவானந்தா தேசிய பாடசாலை முன்பாக நடைபெற்ற போராட்டத்தின்போது ஆசிரியர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் மற்றும் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் குறித்து அந்த அறிக்கையில் எந்தவித கண்டனமும் தெரிவிக்காமல் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்தியகுழு உறுப்பினராகவுள்ள என்னைப்பற்றியே அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனின் அறிக்கை தொடர்பில் வன்மையான கண்டனத்தினை தெரிவிப்பதுடன் குறித்த போராட்டத்தின் பின்புலத்தில் அவர் உள்ளார் என்பது அவரது அறிக்கையூடாக மிக தெளிவாக தெரிகின்றது. என்மீது 41 குற்றச்சாட்டுகள் உள்ளதாக அவரும் அவரது அடிவருடிகளும் தெரிவித்துவருகின்றனர்.அவ்வாறு என்மீது 41குற்றச்சாட்டுகள் இருக்குமானால் இலங்கையினுடைய அரசியலமைப்பின் அடிப்படையில் தாபனவிதிக்கோவையொன்று காணப்படுகின்றது.

இலங்கை அரச ஊழியர்களின் ஒழுக்கம் தொடர்பில் அந்த தாபனவிதிக்கோவை காணப்படுகின்றது.நான் தனிப்பட்ட ஆசிரியருக்கும் அப்பால் இலங்கை அரசியலமைப்புக்குட்பட்ட, தாபன விதிக்கோவைக்குட்பட்ட ஆசிரியர்களைக்கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினராகவும் மட்டக்களப்பு மாவட்ட பொதுச்செயலாளராகவும் இருந்துவருகின்றேன்.

எமது சட்ட ரீதியான அமைப்பாகவும் அதற்கான சட்ட விதிகளும் காணப்படுகின்றது. அதன்ஊடாகவே நான் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றேன்.

நாடாளுமன்ற மூலம் இயற்றப்பட்ட தொழிற்சங்கம் தொடர்பான சட்ட விதிகளுக்குட்பட்டவனாகவே நான் செயற்பட்டுவருகின்றேன் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் புரிந்துகொள்ளவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனுக்கு எவ்வாறு நாடாளுமன்ற சிறப்புரிமைகள் காணப்படுகின்றதோ, அதனைவிட சிறப்புரிமை எனக்கு காணப்படுகின்றது.

சர்வதேச மனிதவுரிமைகள், மனிதாபிமான சட்ட அடிப்படையிலும் சர்வதேச ரீதியிலும் எமது தொழிற்சங்கம் தொழிற்படுகின்றது. இவ்வாறான அமைப்புக்கு எதிரான அறிக்கையினை நான் வன்மையாக கண்டிக்கின்றேன்.

மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவராகவுள்ள அவருக்கு மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பாக கதைப்பதற்கு தகுதியில்லையென்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது சங்கத்திற்கு எதிராக இவ்வாறு தொடர்ந்து செயற்படுவாரானால் அபிவிருத்திக்குழு இணைத்தலைவர் பதவியிலிருந்தும் அவரை வெளியேற்றுவதற்கு நாங்கள் தயங்கமாட்டோம்.

இலங்கையில் ஆசிரியர் சங்கத்திற்கு எதிராக நடைபெற்ற பல அரசியல்வாதிகள் தேர்தல்களில் தோற்கடிக்கப்பட்டுள்ளார்கள்.இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவர் எதிர்காலத்தில் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

64 வருடம் பழமையான சங்கம் எமது சங்கம். நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனை விட இரண்டு இலட்சம் பேர் எங்களது சங்கத்தில் உள்ளனர்.ஆசிரியர்கள், அதிபர்களும் கல்வியலாளர்களும் இணைந்தே இந்த சங்கத்தினை வழிநடாத்துகின்றார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் போன்று குண்டர்களை வைத்துக்கொண்டு நாங்கள் அரசியல் நடாத்தவில்லை.ஒரு சிறந்த தலைமைத்தும் அவருக்கு இருக்குமானால் அவரை பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அழைக்கின்றேன்.

அவரை நான் பல தடவைகள் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அழைத்திருக்கின்றேன். அதனை முகங்கொடுக்கமுடியாத நிலையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன், தனது அரசியல் அதிகாரத்தினைக்கொண்டு ஆசிரியர்களையும், அதிபர்களையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் வரும் கனவை சந்திரகாந்தன் மறக்கவேண்டும்.

ஆசிரியர்கள் மீதும் பாடசாலை விழுமியங்கள் மீதும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனின் ஏற்பாட்டில் போராட்டம் என்ற பெயரில் நடைபெற்ற அடாவடித்தனமான செயற்பாட்டினை எதிர்த்து நாளை இலங்கையில் அனுராதபுரத்திலும், பொலநறுவை உட்பட பல பகுதிகளிலுமிருந்தும் ஆசிரியர்கள் சிவானந்தா தேசிய பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடுகின்றார்கள் என்பதுடன் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் எம்முடன் உடன்படவேண்டும்.

## பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை

நன்றி கூறுகிறேன். விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, அந்தத் துறையின் முன்னேற்றத்துக்கு என பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அந்தவகையில், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த காலங்களில், மாவட்ட விளையாட்டு அரங்கிற்கு என இடப்பட்ட அடித்தளங்களில் வவுனியாவில் மாத்திரமே, தற்போது பணிகள் நிறைவடைந்திருக்கின்றன. மன்னாரில் தடைப்பட்டிருந்த வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டதாகவும், முல்லைத்தீவில் இடம் சம்பந்தமான பிரச்சினையால் அதனை முன்னெடுக்க முடியாதுள்ளது எனவும் அறிகின்றோம். எனவே, இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு வேண்டுகின்றேன்.

இன்றைய விவாதத்தில் சிறைச்சாலை தொடர்பான விடயதானமும் எடுத்துக் கொள்ளப்பட்டது. சிறைச்சாலையில் சில மாதங்கள் இருந்தவன் என்ற வகையில், சில விடயங்களை சிறைச்சாலைக்கு பொறுப்பான அமைச்சரிடம் சுட்டிக்காட்ட விளைகிறேன். அங்கு பணிபுரியும் சிறைக்காவலர்கள், ஊழியர்களின் சம்பளம் மிகவும் குறைவாக இருப்பதை அறிந்துகொண்டேன். எம்மைப் பற்றி எவருமே அக்கறைகொள்வதாக தெரியவில்லை என்ற வேதனையுடனேயே அவர்கள் வாழ்கின்றனர். சுமார் 5000 பேர் ஊழியம் செய்யும், சிறைச்சாலை ஊழியர்களின் நலனில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். அது மாத்திரமின்றி, சிறைச்சாலையில் வசதிகளும் மிகவும் மோசமாக இருக்கின்றது. அவர்களின் விடயத்திலும் கைதிகளும் மனிதர்களே என்ற எண்ணத்துடன் கரிசனை செலுத்துங்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் அநியாயமாக சிறைகளில் வாடுகின்றனர். கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்களில், சுமார் 12,000 பேர் யுத்த முடிவின் பின்னர், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், அதைவிட சிற்சில காரணங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள், இன்னும் குற்றப்பத்திரிகைகள் கூட தாக்கல் செய்யப்படாமல் தசாப்தகாலமாக சிறையில் வாடுகின்றனர். அவர்களின் விடுதலையிலும் கவனம் எடுக்குமாறு நீதி அமைச்சரிடம் வேண்டுகின்றேன்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூட அண்மையில் பேசும்போது, இந்த விடயத்தை கட்டம் கட்டமாக முன்னெடுப்போம் என உறுதியளித்தார். நான் சிறையில் இருக்கும் போது என்னிடம் வந்து அவர்கள் வேதனைப்பட்டனர். அவர்களின் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பல வழக்குகள், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலும் அல்லது விசாரணையின்றியும் இருக்கின்றது. சிங்கள இளைஞர்கள் கூட இந்தச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, சிறையில் காலத்தைக் கடத்துகின்றனர். தமிழ் இளைஞர்கள் பலரின் எதிர்காலமும் கேள்விக்குறியாக மாறியிருக்கின்றது. கடந்த இரண்டு வருட காலத்துக்குள் சுமார் 40 அல்லது 50 இளைஞர்கள், 'புலிகளின் மீளெழுச்சியில் தொடர்புபட்டார்கள்' என கைது செய்யப்பட்டு, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 20, 22 வயது நிரம்பிய இந்த இளைஞர்களுக்கு புலிகள் தொடர்பில் பெரிதாக தெரிந்திருப்பது நியாமில்லை. ஏனெனில், 2009 இல் யுத்தம் முடிந்தபோது, அவர்கள் சுமார் 10 வயது நிரம்பியோர்களாகவே இருந்திருப்பர். வட்ஸ்அப்களிலும், சமூக வலைத்தளங்களிலும் வருகின்ற செய்திகளை பரிமாறியதற்காகவே அவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்த இவர்களுக்கு வழக்காடுவதற்குக் கூட வழி இல்லை. எனவே, அவர்களின் விடுதலையிலும் சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் பலர் கைது செய்யப்பட்டனர். அதில், சுமார் 40 அல்லது 45 பேருக்கு மாத்திரமே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 250 பேர் அளவில், இன்னும் வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் சிறையிலே வாடுகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில், ஒருநாள் வகுப்பு அல்லது செயலமர்வு ஆகியவற்றுக்கு, எதுவுமே அறியாது சென்றதனாலும், சிறிய காரணங்களுக்காகவுமே, பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பிணை வழங்குவது பற்றி நீங்கள் சிந்திக்க முடியும். அவர்களின் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, வழக்குகள் நிறைவடைய நீண்டகாலம் எடுக்கலாம். ஏற்கனவே, வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டவர்களுக்கு 23,000 குற்றச்சாட்டுக்கள் வரை இருப்பதாக நாம் அறிகிறோம். எனவே, இவற்றை விசாரிக்க இன்னும் எத்தனை வருடங்கள் ஆகுமோ தெரியாது. ஆகையால், இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு வேண்டுவதுடன், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

அதேபோன்று, ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டவர் தொடர்பில், பல குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. நாங்கள் இதைப்பற்றி பேசினால் எம்மை பிழையான கண்ணோட்டத்தில் பார்க்கின்றீர்கள். இவ்வாறான ஒருவரின் மூலம் நாட்டில் நிலையான சமாதானத்துக்கான திட்டத்தை கொண்டுவர முடியாது. இந்தச் செயலணியில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டாலும், அங்கீகாரம் இல்லாத அவர்களை நியமித்து, சமூகம் சார்பாக நியமிக்கப்பட்டதாக கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. எனவே, இந்த விடயம், எமது சமூகத்தைப் பொறுத்தவரையில் வேதனையையே தந்திருக்கிறது. ஆகையால், இந்த விடயம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றார்.




## ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரம் : இந்துக்கள்

வேண்டுமென தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (9 ) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய நெடுங்கேணி பிரதேசத்தின் வெடுக்கு நாறிமலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த திருவிழாவை கடந்த இரண்டு ஆண்டுகளாக தொல்பொருள் திணைக்களம் நடத்த விடாமல் தடைசெய்துள்ளமை தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாம் இந்துக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. அவர்களின் வழிபாட்டு உரிமைகள் பறிக்கும் நோக்கமும் எமக்கில்லை. ஆனால் தொல்பொருள் இடங்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

அதேவேளை, ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாடுகள் தொடர்பில் வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது.

எனவே, அந்த வழக்கு முடியும் வரை இந்துக்கள் பொறுமைக்காக்க வேண்டும். இலங்கையில் உள்ள தொல்பொருள் பகுதிகளை பாதுகாக்கும் உரிமை எம் அனைவருக்கும் உள்ளது. அதனை தமிழ் எம்.பிக்களும் விளங்கிக்கொள்ளவேண்டும். ஆகவே நாம் பொறுமையாக இந்த விடயங்களை கையாள்வோம் என்றார்.

## வடமேல் மாகாண ஆளுநராக வசந்த

பணியாற்றிய ராஜா கொல்லுரே உயிரிழந்ததையடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எனினும், 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட மீது குற்றச்சாட்டுகளை தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தது.

இந்தநிலையிலேயே தற்போது கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## இலங்கையில் கணவன்மாரால் 128 மனைவியர்

இலங்கையில் இவ்வாறான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். குறித்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 243 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதன்படி குறித்த காலப்பகுதியில் இடம்பெற்ற இயற்கைக்கு மாறான 243 மரணங்களில், 62 சதவீதமானவை குறித்த பெண்களின் சட்டபூர்வ கணவர் அல்லது முன்னாள் கணவர் அல்லது குடும்ப உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, இவ்வாறான சம்பவங்களில் 69 சதவீதமானவை பதிவு செய்யப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. இது ஆபத்தான விடயம் என்றும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒமிக்ரோன் பிறழ்வு இலங்கையில் வேகமாக

ஒவ்வாமை பிரிவின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரோன் பிறழ்வு கண்டு பிடிக்கப்பட்டு இரு வாரங்களுக்குள் தென் ஆபிரிக்க விஞ்ஞானிகள் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு தரவுகளை மேற்கோட்காட்டி கலாநிதி சந்திம ஜீவந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, வைரஸ் பிறழ்வுகள் தடுப்பூசிகளால் பெற்றுக் கொள்ளப்பட்ட பாதுகாப்பை மீறி தாக்கத்தை ஏற்படுத்தினாலும் , மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் ஒமிக்ரோன் பிறழ்விலிருந்து பாதுகாப்பு பெற முடியும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

தென் ஆபிரிக்காவில் இந்த பிறழ்வு வேகமாகப் பரவுகின்றது. எனினும் அதே வேகத்துடன் இலங்கையிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பரவும் என்று கருத முடியாது.

காரணம் இலங்கையில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டங்கள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பு ஒருபோதும் அரசாங்கத்திற்கு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் , பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில், அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று கோரினார்.

இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் நாமல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்,

கைதிகளின் விடயத்தில், உரிய நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கும், விடுதலை தொடர்பிலும் அரசாங்கம் பொறுப்புடையதாக உள்ளது. அது ஒரு முறைமையிலானது என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதனை செய்வதற்கான சட்ட நடைமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும். நீதி அமைச்சர் அதற்காக செயற்படுகின்றார்.

முதல் முறையாக நாம் அதனை செய்ய முடியும்.அதனை செய்வோம். முன்னரும் அதனை நாம் செய்துள்ளோம்.அரசியல் ரீதியான அறிவிப்பை நாம் வெளியிட மாட்டோம்.ஏனெனில், அது எமது அரசியல் வாக்குறுதி அல்ல.

அரசியல் கட்சி என்ற அப்படையில், நீங்கள் (தமிழ் தேசிய கூட்டமைப்பு) எங்களுக்கு உதவி செய்வதில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். அத்துடன், நீங்கள் ஒருபோதும் எங்களுக்கு உதவ மாட்டீர்கள்.

ஆனால், நாட்டின் பிரஜை என்ற அடிப்படையிலும், அரசாங்கம் என்ற அடிப்படையிலும் எங்களுக்கு பொறுப்பு உள்ளது. அதனை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ் பௌத்தர்களின் அடையாளங்களே

பூசைகளை மீண்டும் நடத்த அனுமதிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலாநாதன் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதில் வழங்கிய தேசிய மரபுரிமைகள் துறை ராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இலங்கையில் தமிழ் சிங்கள் முஸ்லிம்களின் மரபுரிமைகள் பாதுகாக்கப்படும என்று குறிப்பிட்டார். எனினும் வெடுக்குநாரி மலை விடயம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால், தீர்ப்பு வரும் வரை பொறுமை காக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

## தமிழர்களைப் பாதுகாப்பதற்கு கிழக்குத்

கலந்து கொண்டு விட்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

சுதந்திரத்திற்குப் பிறகு தமிழர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், இனச் சுத்திகரிப்பு மற்றும் மனிதக்குலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற பாரிய அட்டூழியக் குற்றங்களைச் சர்வதேச சமூகம் மீண்டும் ஒருபோதும் நிறுத்தத் தவறாது என்பதை உறுதிப்படுத்த முயல்கிறது. எமது தாயகமான வடகிழக்கிற்கு நிரந்தரமான மீளப் பெற முடியாத, பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட அரசியல் தீர்வைக் காணும் வரையில் தமிழர்களைப் பாதுகாப்பதற்குக் கிழக்குத் தீமோரைப் போன்று சில பொறிமுறைகளை அமைக்குமாறு ஐ.நா. விடம் இப்போது கேட்டுள்ளோம்.

சுமந்திரன் குழுவினர் அமெரிக்காவிலிருந்த போது, இலங்கையில் சிறுபான்மையினர் அதிருப்தியில் இருப்பதுதான் இலங்கைப் பிரச்சனை என்று சொன்னார்கள். இதை அமெரிக்க வெளியுறவுத்துறை ட்வீட் செய்துள்ளது.

ஆனால், நமது இளைய தலைமுறையினர் ஒரு நிலைப்பாட்டை எடுத்து, தமிழர்கள் பண்டைய இறையாண்மை கொண்டவர்கள் என்றும் தீவின் பரிணாம வளர்ச்சியிலிருந்து வாழ்கின்றனர் என்றும் பல ட்விட்டர் செய்திகளை அனுப்பினார்கள்.

ஆயிரக்கணக்கான ட்வீட்களுக்குப் பிறகு, அமெரிக்க இராசாங்க திணைக்களம் இது சிறுபான்மையினரின் பிரச்சனையல்ல, தமிழர்களின் இறையாண்மைப் பிரச்சனை என்பதை ஒப்புக்கொண்டு அங்கீகரித்துள்ளது என தெரிவித்துள்ளனர்.

## குற்றவாளிகள், கொலையாளிகள் மற்றும்

கிழக்கிலும் பெரும்பாலான தமிழர்களைக் கொண்டுள்ள நுவரெலியவிலும் ஹட்டனிலும் வலப்பனையிலும் கல்கிஸ்ஸையிலும் நீதிமன்ற நடவடிக்கைகள் முழுமையாக சிங்கள மொழியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கு பின்னால் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரல் இருப்பதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

இதேவேளை வடக்கு,கிழக்கின் பெரும்பாலான இடங்களில் நீதிபதிகள் தமிழர்களாக இருக்கின்றபோதும் நீதிமன்ற பணியாளர்கள் சிங்களவர்களாக உள்ளனர்.

நடைமுறையில் இது யதார்த்தமற்ற செயற்பாடு.எனவே ஏன் இந்த இரட்டை கொள்கையை பின்பற்ற வேண்டும் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நீதியமைச்சர் அலி சப்ரியிடம் கேள்வி எழுப்பினார் .

# கிண்ணியா இழுவைப்படகு விபத்தில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களுக்கும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ் )

கிண்ணியா குறிஞ்சாக்கேணி இழுவைப்படகு தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் நேற்று மீண்டும் உத்தர விட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் புதன்கிழமை இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குறித்த மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளையிட்டார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் கிண்ணியா பெரியாற்றுமுனை பகுதியைச் சேர்ந்த முகமது அலி முகமது ரியாஸ் (40வயது) அப்துல் முத்தலிப் பஸ்மி (35வயது) ஜமால்தீன் முபாரக் (35வயது) எனவும் தெரியவருகின்றது. கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் கடந்த 23ஆம் திகதி இழுவைப் படகு கவிழ்ந்ததில் மாணவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்த நிலையில் இழுவைப் படகை செலுத்திய சந்தேகநபர்கள் தலைமறைவாகி இருந்தனர்.

இந்நிலையில் கடந்த நவம்பர் 24ஆம் திகதி கிண்ணியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதனையடுத்து குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளையிட்டார்.

இதேவேளை கிண்ணியா நகர சபை தவிசாளர் இழுவைப் படகை பாவிப்பதற்கு அனுமதி வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் வழக்கு நேற்று அழைக்கப்பட்டமை தெரிய வருகின்றது.

# உருக்குலைந்த நிலையில் மருதமுனை கடற்கரை பிரதேசத்தில் சடலம் மீட்பு

## மக்களின் உதவியை நாடும் பொலிஸார்



(பாறுக் ஷிஹான்)

உருக்குலைந்த நிலையில் மருதமுனை கடற்கரை பிரதேசத்தில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மருதமுனை பொலிஸ் பிரிவில் வியாழக்கிழமை காலை குறித்த சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய ஸ்தலத்துக்கு வருகை தந்த பொலிஸார் சடலம் குறித்து ஆரம்பக்கட்ட விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இம்மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். மேலும் குறித்த சடலம் அடையாளம் காண முடியாத நிலையில் உருக்குலைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக நாடு பூராகவும் உள்ள கடற்கரைப்பகுதிகளில் உருக்குலைந்த நிலையில் சடலங்கள் கரையொதிங்கி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதனை தொடர்ந்து உடற்கூற்று பரிசோதனைக்காக மாலை அம்பாறை வைத்தியசாலை சவச்சாலையில் வைப்பதற்காக எடுத்து செல்லப்பட்டுள்ளது.

குறித்த சடலம் தொடர்பில் மட்டக்களப்பு பகுதியில் இருந்து மீனவர் ஒருவரின் குடும்ப உறுப்பினர்கள் சில தடயப்பொருட்களை முன்வைத்து அடையாளம் காண வந்திருந்த நிலையில் பொலிஸார் குறிப்பிட்ட உறவினர்களிடம் வாக்குமூலங்களை பெற்றிருக்கின்றனர்.

எனவே குறித்த சடலம் தொடர்பில் அடையாளம் காணுவதற்கு பொலிஸாருக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# கரடியனாறு மாகா வித்தியாலயத்தில் பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழு அலகு திறந்துவைப்பு!













(செங்கலடி சுபோ)

மட்டக்களப்பு - கரடியனாறு மகா வித்தியத்தில் பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழு அலகு திறந்துவைக்கப்பட்டது.

கரடியனாறு மாகா வித்தியாலய பாடசாலையின் அதிபர் ஆர்.செந்தில்நாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் , கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஏ.ஜெயக்குமணன் ஆகியோர் கலந்துகொண்டிருந்ததுடன் கரடியனாறு பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மாவட்ட உளசமூக உத்தியோகத்தர் ஏ.பிரபாகர், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியொகத்தர் நஸா றியாஸ், ஆசிரிய ஆலோசகர் ரீ.குணரெத்திணம், பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ரீ.ஜெயசாந்தினி ஆகியோருடன் ஆசிரியர்கள் மாணவர்கள் பாடசாலை சமூகம் பெற்றோர் பழையமாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அதிதிகளுக்கு மாணவர்களால் பூமாலை அணிவிக்கப்பட்டு பான்ட் வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு மங்கள விழக்கேற்றலின் பின் 'சிறுவர் பாதுகாப்பு அலகு' திறந்து வைக்கப்பட்டது.

பின் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிதிகள் உரை இடம்பெற்றதுடன் மாணவர்களுக்காக அடையாள அட்டையும் வழங்கிவைக்கப்பட்டது.

சிறுவர்களை பாதுகாத்தல், அவர்கள் தொடர்பான பிரச்சிணைக்கு தீர்வு வங்குதல், சிறுவர்களுக்கான ஆலோசணை வழங்கல், கற்றல் மற்றும் உளநல செயற்பாட்டை விருத்தியடையச் செய்தல் என்பன இவ் அலகின் திட்டங்களாகும்.

# பெற்றோல் கடைதீப்பற்றியதில் முற்றாக நாசம்

## விற்பனையாளருக்கு பலத்த காயம்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலைசுதம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி திருகோணமலை 99ம் கட்டை சந்தியில் பெற்றோல் கடை ஒன்று தீப்பற்றியதில் முற்றாக சேதமடைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை (09) மதியம் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது குறித்த பெற்றோல் கடையில் கடையின் உள் பகுதியில் சோளக் கதிரை தீமூற்றி அடுப்பில் வைத்திருந்த நிலையில் பெற்றோல் தீப்பிடித்திருக்கலாம் என ஆரம்ப கட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது. பிரதேச வாசிகள் இணைந்து தீப்பற்றி எரிந்ததை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதில் கடை உரிமையாளரான இரு பிள்ளைகளின் தாயான எச்.எம்.சம்சுநிசா வயது(45) தீக்காயங்களுக்கு உள்ளானதுடன் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு தடயவியல் பொலிசார் சென்று விசாரனைகளை முன்னெடுத்துள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

# இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள கட்டுவன்மயிலிட்டி வீதியை விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை

(சாவகச்சேரி நிருபர்)

யாழ் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள கட்டுவன்மயிலிட்டி வீதியின் 400மீற்றர் தூரத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச இராணுவத் தளபதிக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் ஜனாதிபதி தலைமையில் இடம் பெற்ற பாதுகாப்புப் பற்றிய ஆலோசனைக் கூட்டத்தின் போதே ஜனாதிபதியால் குறித்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. குறித்த கூட்டத்தில் கலந்துகொண்ட

யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் கட்டுவன்மயிலிட்டி வீதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள 400மீற்றர் வீதியை விடுவிக்க வேண்டிய தன் அவசியம் தொடர்பாக எடுத்துரைத்திருந்தார். குறித்த கோரிக்கையின் பயனாக ஜனாதிபதி உடனடியாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு வீதிப் பிரச்சனைக்கு நடவடிக்கை எடுக்குமாறு பணித்திருந்தார்.

குறித்த வீதி யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு செல்லும் வீதியாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# 100 அடி பள்ளத்தில் பாய்ந்த கார்



(க.கிஷாந்தன்)


தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சென்.கிளயார் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதி படுங்காயம்பட்டு நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

நுவரெலியா பகுதியிலிருந்து கொட்டகலை பகுதிக்கு சென்ற கார் ஒன்று நுவரெலியா - அட்டன் பிரதான வீதியில் சென்.கிளயார் பகுதியில் வீதியை விட்டு விலகி குறித்த கார் சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி காரில் சாரதி மட்டும் பயணித்துள்ளதாகவும், அவரே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதி மதுபானம் அருந்தியிருந்ததாகவும், இதனால் அவரின் கவனயீனம் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக தலவாக்கலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வாழைச்சேனையில் 30 லட்சம் மதிக்கத்தக்க அபின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது

(ந.குகதர்சன்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் முப்பது லட்சம் ரூபா மதிக்கத்தக்க அபின் போதை பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வு துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டாரவின் வழிகாட்டலில் குற்ற புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி ஈ.ஏ.டபள்யூ. எஸ்.எதிரிசிங்க தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்களான ஜே.பகீர்தரன், விக்ரமசேகர, எஸ். பண்டார ஆகியோகர் அடங்கிய குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே அபின் போதைப் பொருளும் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டள்ளனர்.



வாழைச்சேனை அல் அக்ஷா வீதியில் சந்தேக நபரின் சகோதரியின் வீட்டினை சுற்றி வளைத்த போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 500 கிராம் அபின் போதை பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஓட்டமாவடி புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த் 39 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். என்றும் போலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன்; தொடர்புடைய வியாபாரிகள் வேறு யாராவது இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருவதுடன் வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் போதைப் பொருள் பாவனையை இல்லாமல் செய்வதற்கு பொலிஸாருடன் இணைந்து வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு அதிகாரிகளும் இணைந்து செயற்பட்டவருவது குறிப்பிடத்தக்கது என்று நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.


வெகுவிரைவில்
கோலாகலமாக
திறக்கப்பட உள்ள
Kings
TRS
Niru
Aachi
LEELA
Maggi
Suryaa
LION
PG tips
Maliban
Rubicon
Double Horse
ELAKKA
Tilda
OKF
Asiatischer Lebensmittelladen
IMPORTAS
200+பார்க்கிங்
வசதியுடன்
HIGHWAY யிலிருந்து
700M தூரம் மட்டுமே!
சுவைமிகுந்த
தாயக உணவுகளை
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய
இடம்
Parkweg 2
4665 Oftringen
Tel : 062 798 11 11
www.importasoftringen.ch


Kings
TRS
Niru
Aachi
LEELA
Maggi
Suryaa
LION
PG tips
Maliban
Rubicon
Double Horse
ELAKKA
Tilda
OKF
IMPORTAS
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch
சுவைமிகுந்த தாயக உணவுகளை
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56
Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44
மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 9000 மாணவர்களுக்கு பிரதமரின் தலைமையில் ஊழியர் நம்பிக்கை போறுப்பு நிதியச் சபையினால் புலமைப்பரிசில்

( வாஸ் கூஞ்ஞ)

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை உறுப்பினர்களின் பிள்ளைகள் 9000 பேருக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் முதலாம் கட்ட காசோலை வழங்கும் நிகழ்வு கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களது தலைமையில் வியாழக்கிழமை (09) அலரி மாளிகையில் இடம்பெற்றது.

முதலாவது கட்டத்தின் கீழ் 6000 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக மக்கள் வங்கியில் சிசு உதான கணக்கினை திறப்பதற்கான 89,82,000 ரூபாய் பெறுமதியான காசோலை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபையின் தலைவர் ஸ்ரீயான் டி சில்வா விஜயரத்ன அவர்களினால் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் வழங்கிவைக்கப்பட்டது.

கௌரவ பிரதமர் குறித்த காசோலையை அச்சந்தரப்பத்திலேயே மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ அவர்களிடம் கையளித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபை உறுப்பினர்களின் 9000 பிள்ளைகளுக்கு ஒருவருக்கு தலா 15இ000 ரூபாய் வீதம் புலமைப் பரிசில் வழங்கப்படும்.

1994ஆம் ஆண்டு தொழில் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் கௌரவ



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் எண்ணக்கருவிற்கமைய இந்த புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய அன்று முதல் இன்று வரை தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசத்தின் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கும்இ தொழிலாளர் பெருமக்களுக்காகவும் முன்னெடுக்கப்படும் ஒரு உன்னத பணியாக இப்புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகிறது.

புலமைப்பரிசில் பெறும் பிள்ளைகளுக்காக குறித்த நிதி மக்கள் வங்கியின் சிசு உதான வங்கிக் கணக்கில் வைப்பிலிடும் போது மலளசேகல சிங்கள - ஆங்கில அகராதி பரிசளிக்கப்படுவதுடன்இ சாதாரணமாக சிசு உதான வங்கிக் கணக்கிற்கு வழங்கப் படும் வட்டி வீதத்திற்கும் அதிகமான வட்டி இக்கணக்கிற்கு வழங்கப் படும். குறித்த சந்தர்ப்பத்தில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தலைவர் ஸ்ரீயான் டி சில்வா விஜயரத்னஇ மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷஇ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை பொது முகாமையாளர் டி.பீ.ஜீ.பெர்னாண்டோஇ மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்குஇ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் எம்.ஜீ.ஏ.சமன் குமார உள்ளிட்ட ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை மற்றும் மக்கள் வங்கி அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர் என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# மாற்றுத் திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு கல்முனையில் விழிப்புணர்வு நிகழ்வு

## பிரதேச செயலாளரிடம் மகஜரும் கையளிப்பு!







( எம் .என்.எம்.அப்ராஸ் )

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு கல்முனையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி இடம்பெற்றது

கல்முனை பிரதேச மட்ட வலது குறைந்தோர் ஒழுங்கமைப்பின் ஏற்பாட்டில் கல்முனை பிரதேச செயலக முன்றலில் புதன்கிழமை இடம் பெற்றது . சமூகத்தில் மாற்றுத் திறனுக்கான தேசிய செயற்பாட்டு திட்டத்தை அமுல்படுத்துமாறு வலியுறுத்தி பதாகைகளை ஏந்தியவாரு குறித்த விழிப்புணர்வு இடம்பெற்றது . மேலும் இதன் போது கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலி அவர்களிடம் மாற்றுத் திறனாளிகள் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர்.

இவ் விழிப்புணர்வு நிகழ்வில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களின் குடுத்பத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு தாழங்குடாவில் நிகழ்வு







(ரக்ஸனா)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு வியாழக்கிழமை (09) மண்முனைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட தாழங்குடாவில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வொன்று இடம்பெற்றது.

சமூக உள்வாங்கல் அமைப்பின் ஏற்பாட்டில் தாழங்குடா சமூக பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்றிருந்தது. சமூக உள்வாங்கல் அமைப்பின் தலைவி செல்வி பே.விஜயலெட்சுமியின் ஏற்பாட்டில் உபதலைவர் ஆ.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதன்போது கலைநிகழ்வுகளை அரங்கேற்றிய சிறார்கள், மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளி பிள்ளைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பத்தைச்சேர்ந்த பிள்ளைகளுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் நிகழ்வில் கலந்துகொண்ட மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் இதன் போது பரிசுப்பொருட்களும் வழங்கிவைக்கப்பட்டதுடன், மாற்றுத்திறனாளிகளின் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றிருந்ததுடன், மாற்றுத்திறனாளி அமைப்பைச் சேர்ந்த மூத்த கலைஞர் இதன்போது பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து அதிதிகளினால் கௌரவமளிக்கப்பட்டதுடன் அதிதிகளின் உரையுடன் நிகழ்வானது நிறைவடைந்துள்ளது.

# தென்மராட்சியில் மக்கள் மருத்துவர் அருளானந்தத்தின் அமுதவிழா





(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சியில் மக்கள் மருத்துவர் என அழைக்கப்படும் மருத்துவர் வைத்திய கலாநிதி சு.சி.அருளானந்தம் அவர்களின் அமுதவிழா நிகழ்வு 04/12 சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெற்றிருந்தது.

வைத்தியர் லயன் அருளானந்தத்தின் சேவையை நயந்து சாவகச்சேரி பொது அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமுதவிழா நிகழ்வில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர், கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர், சாவகச்சேரி நகரசபை தவிசாளர், உறுப்பினர்கள், தென்மராட்சி இலக்கிய அணியினர், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர், மருத்துவர்கள் , தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பாராட்டு உரைகளை வழங்கியிருந்தனர். நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக 'அருளானந்தம்' மலர் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. மலரினை யாழ்ப்பாண தமிழ் சங்கத் தலைவர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் வெளியிட்டு வைத்தார்.

# பசளை தட்டுப்பாட்டால் சோளச் செய்கையில் பாரிய வீழ்ச்சி



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மஜீத் நகர் வெல்லாங்குள சோளச் செய்கையாளர்கள் இம் முறை விளைச்சலின்றி நஷ்டம் அடைந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். போதிய பசளை இன்றி தட்டுப்பாடு காரணமாக சோளச் செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது தங்களது வாழ்வாதாரமாக சோளச் செய்கையை நம்பியே வாழ்ந்து வருவதாகவும் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உரிய பசளை இன்றி விளைச்சலின்மை பல இலட்சம் ரூபா முதல் செய்து செய்கையில் ஈடுபட்ட போதும் உரிய பயன் கிடைக்கவில்லை ஒரு கிலோ சோள விதையின் விலை 1%00 ஆனாலும் பல ஏக்கரில் இச் செய்கையினை மேற்கொண்ட போதும் விளைச்சல் கிட்டவில்லை மனைவி பிள்ளைகளின் நகைகளை அடகு வைத்து சோளப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட போதும் இந்த முறை பசளை இன்மையால் பாரிய பொருளாதார பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளோம் எனவும் சோளச் செய்கையாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். எனவே தங்களுக்கான நஷ்ட ஈட்டினை அரசாங்கம் முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# யானைகளின் அட்டகாசத்தால் விவசாய நிலங்கள் பாதிப்பு





(ந.குகதர்சன்)

வாழைச்சேனை கமநல சேவைக்குட்பட்ட மக்குளான பள்ளிமடு வயல் பிரதேசத்திற்குள் புகுந்த யானைகளினால் வேளான்மை, தோட்ட பயிர்கள் மற்றும் குடிசை என்பன சேதமாக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காட்டுப்பகுதிக்குள் இருந்து வரும் யானை குறித்த பகுதிக்கு தொடரச்சியாக வருகை தந்த வண்ணம் உள்ளது. இதன் காரணமாக வேளான்மை வளர்ந்து



வரும் நிலையில் அதனை துவம்சம் செய்வதுடன், சோளம், கச்சான் போன்றவற்றினையும் அழிப்பதுடன், வயல் வாடி குடிசைகளை உடைத்து சேதப்படுத்தியதுடன், நிறுத்தி வைக்கப்பட்டிருந்து மாட்டு வண்டிலை தூக்கி எறிந்துள்ளதுடன், பாவனைப் பொருட்களையும் சேதப்படுத்தி சென்றுள்ளது.

நாங்கள் குறித்த கண்டத்தில் விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டு நாற்பது நாட்கள் கடந்த நிலையில் காட்டுக்குள் இருந்து யானைகள் மூன்று தடவைகள் வந்து அழித்து சென்றுள்ளது நாங்கள் பல்வேறு கஷ்டத்திற்கு மத்தியில் கடன் பெற்று விவசாய செய்கையினை மேற்கொண்டுள்ளோம் இந்த நிலையில் யானைகளினால் தொடர்ந்து சேதம் ஏற்படுவதனால் நாங்கள் கஸ்டத்தை அனுபவித்து வருகிறோம்.

குறித்த பகுதியில் யானைகளின் தொல்லை அதிகாரித்து காணப்படுவதாகவும், யானை தொல்லையில் இருந்து எங்களது உயிர்களையும் வேளான்மை செய்கைகளையும் பாதுகாப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விவசாயிகள்; கோரிக்கை விடுக்கின்றனர்.



SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01

Mattengasse 17, 8005, Zürich, Swiss

info@srijewellery.ch

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

SwissLife Select

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI

முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய

Online Tech Network
நிறுவனத்தில்



ECDL
Office
Windows 10

தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.

Allegrotto Pizza Kurier

Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch

# மதம், மொழி என்பவற்றால் மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தக் கூடாது

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மோகிதீன் கருத்து

எந்தவொரு விடயத்தையும் மனிதாபிமானதோடு நோக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம். அனைத்து மக்களும் அன்னியோன்யமாக விட்டுக்கொடுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமே தவிர, மதத்தையோ மொழியையோ வைத்து மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தக்கூடாது .

இலங்கை வந்துள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவரும், முன்னாள் இந்திய லோக் சபா(பாராளுமன்ற) உறுப்பினருமான கே.எம்.காதர் மொகிதீன் இவ்வாறு கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் ஏற்பாட்டில்,பத்தரமுல்லை 'மோட்டர்ஸ் எட்ஜ்' ஹோட்டலில், செவ்வாய் கிழமை (7)இடம் பெற்ற சிறுபான்மைச் சமூகங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான இராப்போசன விருந்துபசார நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது, மூத்த இந்திய அரசியல்வாதிகளில் ஒருவரான பேராசிரியர் காதர் மொகிதீன் மேலும் தெரிவித்தாவது,

இலங்கை தீவின் முக்கியமான அரசியல் பிரமுகர்கள் இங்கு வருகை தந்திருக்கின்றனர். இதனை நான் எதிர்பார்த்திருக்கவில்லை. கற்பனைக்கு அப்பாற்பட்ட விடயமாக உள்ளது. அமெரிக்க பல்கலைக்கழகமொன்றின் சார்பில் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காகவே இங்கு வந்தோம். வந்த இடத்தில் முக்கிய தலைவர்கள் பலரைச் சந்திக்கின்ற வாய்ப்பு கிடைத்தது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஏற்பாடு செய்த இந்தச் சந்திப்பிலும் விருந்துப்பசாரத்திலும் கலந்து கொள்வதிலும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இலங்கை அழகான தீவு. எல்லா வகையிலும் முன்மாதிரியாக திகழக் கூடிய ஒரு நாடு. ஒரு சிறிய நாடாக இருந்தபோதிலும், இங்கு வாழக் கூடிய எல்லா மக்களும் அண்ணன் தம்பிகளாக இருக்க வேண்டும். அந்த உணர்வை அதிகமாக மக்களுக்கு பரப்ப வேண்டும். அதில் எங்களுக்கு நிறைய நம்பிக்கையுள்ளது. இஸ்லாமிய மார்க்கத்தை சேர்ந்த எங்களாலும் , ஏனைய மதங்களை சேர்ந்தவர்களாலும் இந்த இலங்கைப் பூமிக்கு தனி அந்தஸ்து கொடுக்கப் படுகின்றது. இந்த பூமியில் இருந்து தான் முதல் மனிதன் தோன்றினான் எனவும் கூறப் படுகின்றது. அது எல்லா மதங்களிலும் சொல்லப்பட்ட அடிப்படையான கருத்துமாகும். இத்தகைய சிறப்பு மிக்க இந்த பூமியில் இருந்து வரக்கூடிய ஒவ்வொரு விடயமும் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.



தமிழகத்தில் இப்பொழுது சாதி, மதம் மற்றும் ஏழை, பணக்காரன் பேதமின்றி, முதல்வர் மு. க. ஸ்டாலினின் நல்லாட்சியில் வாழ்கின்றோம். எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் சகல விதமான நன்மைகளையும் தேவைகளையும் செய்வதற்கு உறுதி பூண்டிருக்கின்ற ஒரு முதலமைச்சரை நாங்கள் பெற்றிருக்கின்றோம். அது நாங்கள் பெற்ற பாக்கியமாகும்.

இந்தியாவுடைய சக்தியை மேம்படுத்துவதிலும், வளர்ப்பதிலும், அபிவிருத்தியிலும் அதனுடைய ஆற்றலை உலகத்திற்கு தெரிவிப்பதிலும் எங்கள் நாட்டின் நிர்வாகிகள் மிகவும் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எங்களது மத்திய அரசு செய்யக்கூடிய பல்வேறு திட்டங்கள் வரவேற்கத்தக்கவை

குறிப்பாக, இப்போதுள்ள கொவிட் 19 சூழலில் 132 கோடி மக்கள் வாழ்கின்ற இந்தியாவில் 120கோடி மக்களுக்கு மேல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று கொரோனாவை எதிர் கொண்டு வருகின்றார்கள். நான்கு மாதங்களுக்கு முன்னாள் இருந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை இப்போது வெகுவாக குறைந்துள்ளது. இது மிகவும் பாராட்டத்தக்கது.

இந்த நாட்டில் முழுமையாக தடுப்பூசி வழங்கப்படவில்லை என்ற குறைபாட்டிற்கு ,இதர நாடுகளும் முன் வந்து உதவி செய்ய வேண்டும். இது இந்தியாவுடைய சகோதர நாடாகும். இந்த நாடு நன்கு அபிவிருத்தியடைத்து மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று கருத வேண்டியது நம் நாட்டின் கடமையாகும்.

எமது முன்னாள் பிரதமர் வாஜ்பாய் 'அடிக்கடி உலகத்தில் நண்பர்களும் எதிரிகளும் வந்து போவார்கள் ஆனால் அண்டை நாடு என்பது மாறவேமாட்டது' என்றார். அண்டை நாடுகளில் உள்ளவர்களுக்கு இந்தியா எப்பொழுதும் அனுசரணையாக இருந்து உதவிக்கரம் நீட்டி வருகிறது. அந்த அடிப்படையில் இந்த நாட்டில் பல்வேறு திட்டங்களை இந்திய அரசு மிக சிறப்பாகச் செய்துள்ளது.

மத்திய அரசாங்கத்தோடு எங்களுக்கு கொள்கையில் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன.அது வேறு.

தொற்று நோய் பரவிவரும் இந்த நேரத்தில் எல்லா விதமான உதவிகளையும் செய்வதற்கு உரிய முறையில் எமது பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று பணிவாக வேண்டிக்கொள்கின்றேன். இங்கு வாழ்கின்ற மக்கள் நன்றாகவும் சமூகமாகவும் முன்னேற்றமாகவும் இருக்கிறார்கள் என்றால், அது தமிழ் நாட்டிலுள்ள எங்களுக்கு பெருமையாகும். இங்கு வாழக்கூடிய அனைவரும் ஒற்றுமையாக சகோதரர்களாக வாழ வேண்டும். நாம் எல்லாம் ஒரு இன மக்கள் அதாவது மனித இனத்தை சேர்த்தவர்கள் என்ற உணர்வில் எங்களை போன்றவர்கள் தொடர்ந்தும் செயற்பட்டுகொண்டிருக்கிறோம்.

எந்தவொரு விடயத்தையும் மனிதாபிமானதோடு நோக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். மனிதர்களிடயே சர்ச்சைகளை ஏற்படுத்தாது மனிதாபிமானதோடு இந்தியா முழுவதிலும் செய்து கொண்டிருக்கிறோம். எமது கட்சி சற்று பலமான கட்சியாகும். அனைத்து மக்களும் அன்னியோன்யமாக விட்டுக்கொடுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமே தவிர, மதத்தையோ மொழியையோ வைத்து மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தக்கூடாது என்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட சிறுபான்மைச்சமூகங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோருடன் இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே.ஜேகப்பும் இதில் கலந்து கொண்டார்.

# மட்டக்களப்பில் 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு 3 ம் கட்ட பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பம்

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

60 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கான மூன்றாம் கட்ட பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரில் முன்னெடுக்கப்பட்டுவருவதாக

மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே. கிரிசுதன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனை பிரிவிற்குட்பட்ட மண்முனை வடக்கு பொது சுகாதார பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ள மூன்றாம் கட்ட பைஸர் தடுப்பூசிகளில் முன்னுரிமை அடிப்படையில் 60 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் 7 தடுப்பூசி ஏற்றும் நிலையங்களில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பாலமீன்மடு, சின்னஊறணி, கருவப்பங்கேணி, இருதயபுரம் கிழக்கு ஆகிய நான்கு பொதுசுகாதார பிரிவுகளில் நேற்று பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.






# வாழைச்சேனை பிரதேச செயலகம் நடத்திய பிரதேச கலாசார விழா



**(ந.குகதர்சன்)**

கலாசார அலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகம் நடாத்தும் பிரதேச கலாசார விழா செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் அஷ் ஷெய்க் ஏ.எல்.பீர்முஹம்மது தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும் சிரேஷ்ட இலக்கிய முன்னோடியுமான ஏ.எம்.ஏ.காதர் கலந்து கொண்டதுடன் அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம்.ரிஸ்வி (மஜீதி), பிரதேச செயலக கணக்காளர் ஏ.மோகனகுமார், நிருவாக உத்தியோகத்தர் யூ.எல்.அப்துல் ஹமீத், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எஸ்.பீ.எம்.ருமைஸ், செயலக உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கலாசார விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் பிரதேச கலைஞர்களினதும் மாணவர்களினதும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

# தோட்ட கங்கானிமார்க்கு இடம்பெற்ற தலைமைத்துவ பயிற்சி



**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

ஹேலீஸ் கம்பனியின் கீழ் இயங்கும் பெருந்தோட்டங்களில் சேவையாற்றும் கங்கானிமார்களின் தலைமைத்துவம் மற்றும் ஆற்றல் அபிவிருத்தி பயிற்சி நெறியில் கலந்துகொண்ட 45 கங்கானிமார்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தலவாக்கலை லோகி தோட்ட பயிற்சி மண்டபத்தில் 9.12.2021 வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தலவாக்கலை பெருந்தோட்ட இயக்குனர் நிஷாந்த அபேசிங்க, பிரதேச பொது முகாமையாளர் கோசல விஜேசேகர, பிரதி பொது முகாமையாளர் ஹெரங்க எக்கொடவெல ,சிரேஸ்ட முகாமையாளர் துல்சங்க ஜயதிலக்க மற்றும் மனித வள முகாமையாளர் சுப்ரமணியம் ராம் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.





அப்துல் அஸீஸ்
பிராந்திய இணைப்பாளர்,
இலங்கை மனித உரிமைகள்
ஆணைக்குழு, கல்முனை

# சகலரும் மனிதர்கள், சகலரும் சமமானவர்கள்




## இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம்– மார்கழி 10

### மனித உரிமைகளின் வரலாறு

மனித உரிமைகளின் வரலாறு ஆயிரக் கணக்கான ஆண்டுகளை உள்ளடக்கியது எனலாம். மனித உரிமை பற்றிய கருத்துக்கள் 1789ல் ஏற்பட்ட பிரான்சிய புரட்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட பிரான்சிய அரசியலமைப்புக்குள்ளும். அமெரிக்க புரட்சியுடன் முன்வந்த தோமஸ் ஜெபர்சனினால் வரையப்பட்ட 1767ல் அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்க சுதந்திர சாசனத்தினுள்ளும், மனித உரிமைகள் உரிமைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன. அதே போல், பிரித்தானியாவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'மக்னாகாட்டா'ஒப்பந்ததும், சிரேஸ்ட சுதந்திர கருத்தியல்வாதியான ஆப்ரஹாம் லிங்கனினால் முன்வைக்கப்பட்ட சமத்துவம் தொடர்பான கருத்தியலும் மனித உரிமைகள் தொடர்பான முக்கிய கடமையாற்றியுள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்ததும் வெற்றி பெற்ற நாடுகள் 1945ல் உக்ரேனில் யால்டா மாநாட்டில் கலந்து கொண்ட போது, உலக சமாதானத்தைப் பாதுகாக்க தவறிவிட்ட சர்வதேச சங்கத்தின் இடத்தில் வேறொரு புதிய அமைப்பொன்றை அமைக்க முன்வந்தன. இந்த அமைப்புத்தான் ஐக்கிய நாடுகள் சபையாகும். இது தோன்றியதிலிருந்து சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் முக்கியமான பங்கை வகித்து வருகின்றது. மூன்றாம் உலக மகா யத்தம் ஒன்றினைத் தடுக்கும் நோக்கில் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் முக்கிய இலக்காக மனித உரிமைகளுக்கு கௌரவம் என்பதாகும்.

மனிதன் ஒரு உயிராக இருப்பதனால் அவனுக்கு வாழும் உரிமை உண்டு. மனித உரிமைகள் என்றால் எல்லா மனிதர்களுக்கும் உரிய அடிப்படையிலான உரிமைகளையும், சுதந்திரங்களையும் குறிக்கின்றன. ஒரு மனிதன் உயிர்வாழ்வதற்கு அமைதியான அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கு என்னவெல்லாம் தேவையோ அவற்றை மனித உரிமைகள் எனக் கருதலாம். இவற்றில் அடிப்படைத் தேவைகளான நீர், உணவு, உறைவிடம் போன்றவற்றுடன் கொலை செய்யப்படாமலும். சித்திரவதை செய்யப்படாமலும். அவமதிக்கப்படாமலும் வாழ்வதற்கான உரிமையும் இதில் உள்ளடக்கப்படுகிறது.

### அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

மானிடக் குடும்பத்தினர் உள்ளார்ந்த கௌரவத்தையும், அவர்களின் சமமான, பிரிக்க முடியாத உரிமைகளையும் அறிந்து ஏற்பதே உலகில் சுதந்திரம், நீதி மற்றும் சமாதானத்தின் அடித்தளம் ஆகும்ʼ என சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் முன்னுரை எடுத்துக் கூறுகிறது.

இதனடிப்படையில் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் 1948 டிசம்பர் 10ம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் கொண்டு வரப்பட்டது. மனித உரிமைகள் உலகளாவியவை. அதாவது யாவருக்கும் கிடைப்பவை. இந்தக் கொள்கைதான் முதன் முதலில் வலியுறுத்தப்பட்டது. மனித உரிமைகள் என்ற கருத்தாக்கம் சட்டபூர்வமாக்குமாறு உலகிலுள்ள எல்லா மனிதர்களுக்கும் கிடைக்கவேண்டிய உரிமைகளையும், சலுகைகளையும் வரலாற்றில் முதன் முறையாக 30 உறுப்புரைகளைக் கொண்ட இந்த ஆவணம் எழுத்து வடிவில் பதிவு செய்தது. மனித உரிமைகள் எல்லா மனிதர்களுக்கும் உரியவை என்ற சிந்தனை நாடுகள் அல்லது பிரதேசங்களின் அரசியல் அந்தஸ்து வேறுபாடின்றி இதனைச் பரவச் செய்ய வேண்டும் என கையெழுத்திட்ட உறுப்பு நாடுகளுக்கு பொதுச் சபையினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

'உலகில் நிலவும் சுதந்திரம், நீதி மற்றும் சமாதானம் என்பவை குறித்த அடிப்படை மனித குலத்தைச் சேர்ந்த சகலரினதும் கௌரவம் மற்றும் பராதீனப்படுத்த முடியாத உரிமைகளின் அங்கீகாரமாகவிருப்பதால் என்று ஆரம்பிக்கின்றது. இதன் மூலம் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உள்ளடக்கமும், நோக்கமும், மனித உரிமைகள் சம்பந்தமான ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலட்சியமும் புலனாகின்றது. இவ்வருடத்திற்கான கருப்பொருளாக சகலரும் மனிதர்கள், சகலரும் சமமானவர்கள் என்பதாகும்.

மானிடக் குடும்பத்தின் உறுப்பினர்களின் உள்ளார்ந்த கௌரவத்தினையும் அவர்களின் சமமான பிரிக்க முடியாத உரிமைகளையும் சுதந்திரம், நீதி, சமாதானம், இவற்றின் அடித்தளமாக இருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பிரகடனத்தை ஏற்ற போது 48 நாடுகள் உடன்பாடாக வாக்களித்தன. 8 நாடுகள் வாக்களிக்கவில்லை. மனித உரிமைகளில் நல்வாழ்க்கைக்கும், விடுதலைக்குமான உரிமை, பேச்சுத் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் சட்டத்தின் முன் சமத்துவம் போன்ற குடியுரிமை மற்றும் அரசியல் உரிமைகளும் அடங்கியிருக்கின்றன. அத்துடன் கலாச்சார செயற்பாடுகளில் பங்கெடுத்தல். வேலைக்கான உரிமை, கல்விக்கான உரிமை உட்பட சமூக பொருளாதார கலாச்சார உரிமைகளும் இவற்றில் உள்ளடக்கப்பட்



டுள்ளன. பொதுவான மனித உரிமைகள் பல சமயங்களில் உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், சர்வதேச சட்டங்கள். அல்லது பிற மூலங்கள் என எழுதப்பட்ட சட்டங்களால் பாதுகாக்கப்படுகின்றன. தனிமனித அல்லது குழு உரிமைகளை மேம்படுத்தவும் அல்லது பாதுகாக்கவும் சட்டபூர்வமான வழிகளில் செயல்பட சர்வதேச மனித உரிமைகள் சட்டம் அரசாங்கங்களுக்கு பொறுப்புக்களை அளிக்கிறது.

மனித உரிமைகள் யாவருக்கும் உரியது. பல்வேறு நாடுகளில் மனிதர்கள் நடத்தப்படும் முறை பல்வேறு இருந்தாலும் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் இன்று உலகிலிருக்கும் எல்லா மக்களுக்கும் இது பொருந்தும். சில நாடுகள் மனித உரிமைகளை மதிக்கின்றன. இன்னும் சில நாடுகள் இவ்வாறு செய்யாமல் மனித உரிமைகள் மீது வெறுப்பும் அவற்றை மதிக்காமையும,காட்டுமிராண்டித்தனமான செயல்களை உருவாக்கி மானிட இனத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கி பொதுமக்களின் மிக உயர்ந்த விருப்பமான பேச்சு மற்றும் நம்பிக்கைச் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

### மனித உரிமைகள் யாவருக்கும் கிடைப்பவை

இனஞ்சார், மதஞ்சார் மற்றும் மொழிசார் சிறுபான்மையினரைச் சேர்ந்த ஆட்களின் உரிமைகள் சம்பந்தமாக குடியியல், மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தில் 27 ம் உறுப்புரையின் ஏற்பாடுகள் கூறுகிறது. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் இன ரீதியான வேறுபாடுகள் காட்டப்படக்கூடாது என கூறுகிறது. இனம், பால், நிறம், போன்ற பலவற்றின் அடிப்படையி;ல் வேறுபடுத்தி நோக்குதலை இது தடைசெய்கிறது. அதாவது வேறுபடுத்தி நோக்காத கோட்பாட்டின் அடிப்படை சமத்துவக் கோட்பாடாகும். இதனைத்தான் மனித உரிமைகள் பிரகடனத்தில் முதலாவது உறுப்புரை 'தகுதிகளிலும், உரிமைகளிலும் எல்லா மனிதர்களும் சமமாகவும், சுதந்திரமாகவுமே பிறக்கிறார்கள்'என கூறப்பட்டுள்ளது. மனித உரிமைகள் யாவும் ஒன்றி;ற்கொன்று நெருக்கமானவை. ஒன்றையொன்று சார்ந்தவை. ஓர் உரிமையை மேம்படுத்துவது பிற உரிமைகளையும் மேம்படச் செய்யும். அதே போல் ஓர் உரிமையை மறுப்பது பிற உரிமைகளையும் எதிர்மறையாக பாதிக்கிறது.

### மனித உரிமை மீறல்கள்

அனைத்துலக மனித உரிமைக் பிரகடனங்களி;ல் உள்ள விடயங்களை அல்லது சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களையோ எந்த அரசோ அல்லது தனி மனிதரோ, குழுவோ அவமதி;த்து மீறும் போது மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறான மனித உரிமைகள் மீறப்படும் போது ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு அல்லது அவர்களால் நியமி;க்கப்பட்ட சபைக்கு மட்டுமே எந்த உரிமை மீறப்பட்டுள்ளன என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கும் தார்மீகப் பொறுப்பு உள்ளது. இந்த வகையில் மனித உரிமை மீறல்களை ஐக்கிய நாடுகள் குழுக்கள், தேசிய நிறுவனங்கள், அரசாங்கங்கள், சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சித்திரவதைக்கு எதிரான உலக நிறுவனம் கருத்துப் பரிமாற்றத்திற்கான சர்வதேச அவை போன்ற பிரபல்யமானவர்கள் கண்காணிக்கின்றனர் மட்டுமன்றி அவற்றினை ஆவணப்படுத்துகின்றனர். அதன்பின் மனித உரிமைச் சட்டங்களை மதிக்குமாறும், அமுல்படுத்துமாறு அந்தந்த நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர்.

ஆக்கிரமிப்பு போர்கள், போர் குற்றங்கள், இனப்படுகொலை உள்ளிட்ட மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவை சர்வதேச மனிதாபிமானச் சட்டத்திற்கு எதிரானவை. இவைகள்தான் மனித உரிமைகள் மீறல்களில் மிகக் கடுமையானதாகும் என்பதால் பொறுப்புடன் கையாள வேண்டிய தேவை அனைவருக்கும் இருக்கிறது.

### அரசுகளின் கடற்பாடுகள்:

எல்லா அரசுகளும் மனித உரிமைகளை அளிப்பது போலவே பொறுப்புக்களையும் கொண்டுள்ளது. அரசுகள் இந்தப் பொறுப்புக்களையும, கடமைகளையும் மதிக்க, பாதுகாக்க, நிறைவேற்ற வேண்டியது சர்வதேச பிரகடனங்களின் பணியாகும் என கருதப்படுகிறது. மனித உரிமை மீறல்களிலிருந்து தனிமனிதனையும், குழுக்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசுகளிடம்தான் இருக்கிறது. மனித உரிமைகளை எவரும் பறிக்கக்கூடாது. ஒருவன் நீதிமன்றத்தில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டால் மாத்திரமே அவனது சுதந்திரம் கட்டுப்படுத்தப்படலாம்.

உலகின் எல்லா மூலைகளிலும் மனிதர்கள் யாவருக்குமான உரிமைகளை மேம்படுத்தவும், மதிக்கவுமான சக்திகள் பல இருக்கின்றன. எண்ணற்ற மனித உரிமைப் பிரச்சினைகளையும் நிகழ்வுகளையும் திறம்பட்க் கையாள போதுமானதாக அவைகள் இல்லை என்பதுதான் பெரும் குறையாகவுள்ளது. இந்த பிரகடனத்தில் முன்வைக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளை ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் அனைத்தும் இசைந்து ஏற்றுள்ள நிலை நமது அன்றாட வாழ்க்கையில் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை வலிமையாக்கவும், வலியுறுத்தவும் செய்கிறது.




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
UTHAYAKUMAR EDUCATION CENTER
உதயகுமார் கல்வி மையம்
வளர்ச்சியின் உச்ச நிலை கல்வி
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Frühstück / Mittagessen / Abendessen
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Nummer
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA
TWINT
Maestro

# மட்டக்களப்பில் யானைகளுக்கும் மனிதர்களுக்கு இடையில் ஏற்படுகின்ற மோதலைத் தடுப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்திற்குப் போதிய வசதிகள் இல்லை

## பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் ஜனா

(சுமன்)

மட்டக்களப்பில் யானைகளுக்கும் மனிதர்களுக்கு இடையில் ஏற்படுகின்ற மோதலைத் தடுப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்திற்குப் போதிய வசதி வாய்ப்புகள் இல்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக மூன்றே மூன்ற அலுவலகங்களும் பதினைந்து உத்தியோகத்தர்களுமே இருக்கின்றார்கள். கடந்த காலங்களில் நடைபெற்ற அந்த உயிரிழப்புகளைக் கருத்திற்கொண்டு மேலும் மூன்று புதிய அலுவலகங்களாவது மட்டக்களப்பில் அமைக்கப்படல் வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வனஜீவராசிகள் திணைக்களம் தொடர்பான உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனிதர்களுக்கும் யானைக்கும் இடைப்பட்ட மோதல்களைப் பற்றி எமது இராஜாங்க அமைச்சர் விளக்கவுரையாற்றினார். யானைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் மனித உயிர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது நாங்கள் வலியுறுத்திக் கூறுகின்ற விடயம்.

மட்டக்களப்பு மாவட்டத்தல கடந்த பத்து ஆண்டுகளின் 117 மனித உயிர்கள் யானைகளால் காவுகொள்ளப்பட்டிருக்கின்றது. அதே நேரத்தில் இந்த பத்து வருடத்தில் 135 யானைகளும் கொல்லப்பட்டிருக்கின்றன. மனிதர்கள் தங்களது வாழ்வாதாரத்தையும், உயிர்களையும், தங்கள் சொத்துக்களையும், உழைப்புகளையும் பாதுகாப்பதற்கு யானை வேலிகளிலே ஏற்படுத்தப்பட்டிருக்கும் மின்சாரத் தாக்கத்தினாலும் இந்த யானைகள் பலியாக்கப்பட்டிருக்கின்றன.



மட்டக்களப்பில் யானைகளுக்கும் மனிதர்களுக்கு இடையில் ஏற்படுகின்ற மோதலை சிறப்பகத் தடுப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்திற்குப் போதிய வசதி வாய்ப்புகள் இல்லை. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் பிரதேசத்திற்கு இரண்டு வனஜீவராசிகள் அலுவலகங்கள் இருந்தாலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக மூன்றே மூன்ற அலுவலகங்களும் பதினைந்து உத்தியோகத்தர்களுமே இருக்கின்றார்கள். அதிலும், ஒரே ஒரு பிராந்திய அலுவலகமும், இரண்டு உப அலுவலகங்களுமே இருக்கின்றன.

கடந்த காலங்களில் நடைபெற்ற அந்த உயிரிழப்புகளைக் கருத்திற்கொண்டு மேலும் மூன்று புதிய அலுவலகங்களாவது மட்டக்களப்பில் அமைக்கப்படல் வேண்டும். வெல்லாவெளியில் இருக்கும் அலுவலகம் தரமுயர்த்தப்படல் வேண்டும் என்பதற்கு மேலாக ஒரேயொரு பழுதடைந்த வாகனத்துடன் பதினைந்து உத்தியோகத்தர்கள் எவ்று யானைகளிடமிருந்து மனிதர்களையும், மனிதர்களிடமிருந்து யானைகளையும் காப்பாற்றுவார்கள் என்பதை உணர்ந்து கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தைப் பாதுகாக்க வேண்டும்.

மட்டக்களப்பிலே 176 கிலோமீட்டருடைய பதினாறு யானை வேலிகள் இருக்கின்றன. எதிர்காலத்தில் 107 கிலோமீட்டர் வேலிகள் அமைக்க இருப்பதாக அறிகின்றோம். அதனைச் சற்ற அதிகரித்து வேலிகள் அமைப்பது மாத்திரமல்லாமல் யானைகள் அந்த வேலிகளை உதைத்துவிட்டு வருகின்றது எனவே அதற்கேற்றால் போல் அந்த வேலிக்கட்டைகளில் கம்பி சுற்றுவதும், வேலிகளுக்குக் கொடுக்கப்படும் மின்சாரத்தின் அளவினை அதிகரிகக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், வன இலாகாவினர் பண்ணையாளர்களை மிகவும் துன்புறுத்துகின்றார்கள். அவர்கள் தங்கள் பண்ணைகளுக்குச் செல்லும் போது பண்ணையாளர்களைக் கைது செய்து தண்டம் அறிவிடுவதையும் நிறுத்த வேண்டும்.

அது மாத்திரமல்லாமல் முல்லைத்தீவில் கூட இருபத்து மூவாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் நான்கு பிரதேசங்களில் வன இலாகாவினால் அபகரிக்கப்பட இருக்கின்றது. அவைகளை நிறுத்தித் தருவதுடன், தேசிய பூங்காக்களையம். வனிஜீவராசிகள் சரணாலயங்களையும் பிரகடணப்படுத்தியுள்ள எல்லைகளை மீளமைத்தல் என்ற அடிப்படையில் முன்னாள் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரோரா வினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. காயான்கேணி சமூத்திர இயற்கை ஒதுக்கம் பிரகடணப்படுத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதனையும் பிரகடணப்படுத்தல் வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

### சர்வதேச மாதவிடாய் தினம் :

# நாட்டில் 30 வீதம் பாவனையில் உள்ள நப்கின்ஸ் வரி 15 வீதத்தினால் அதிகரிப்பு பெண்கள் தோற்று நோய்க்கு ஆளாகும் நிலை

## விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

நாட்டில் 30 வீதமான பெண்கள் மாத்திரமே மாதவிடாயின் போது பயன்படுத்தப்படும் சானிட்டரி நப்கின்ஸ்களை பயன்படுத்துவதாகவும் அத்தியாவசிய ஒன்றாக இருக்கின்ற சானிட்டரி நப்கின்ஸ்களுக்கு 15 வீதமான வரியினை நாட்டின் தற்போதைய அரசாங்கத்தில் அதிகரித்துள்ளமையினால் பெண்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதுடன் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு வருவதாகவும் இதனால் பல தொற்று நோய்களுக்கு உள்ளாகி வருவதாகவும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை ஊடக இல்லத்தின் நேற்றுமுன்தினம் (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஆவணப்படுத்தும் உத்தியோகத்தர் கே. சிவஜோதி இதனை தெரிவித்தார்.

மார்கழி மாதம் 08ம் திகதி நடைபெறும் சர்வதேச மாதவிடாய் தினத்தையொட்டி ''மாண்புடன் கூடிய மாதவிடாய்'' எனும் தொனிப்பொருளில் விழுது மேம்பாட்டு ஆற்றல் மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு ஊடக சந்திப்பு இடம்பெற்ற போதே அவர் இக் கோரிக்கையை முன்வைத்தார்.




மேலும் சானிட்டரி நப்கின்ஸ்களின் விலைகள் அதிகரிப்பினால் பொருளாதாரரீதியாக பாதிக்கப்படும் பெண்கள் மாதவிடாயை பிற்போடும் மாத்திரைகளை பயன்படுத்துவதினால் குடும்ப பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் சூழ்நிலைக்கு உள்ளாவதாக இதன்போது சுட்டிக்காட்டினார். மேலும் இவ் மாதவிடாய் காலங்களில் பெண்கள் கருவறையிலிருந்து கல்லறை வரை பாராபட்சம் காட்டப்படுகின்றனர் எனவும் மாதவிடாய் காலங்களில் ஒரு பெண் மரணிப்பாளேயானால் அந்த உடலுக்கு செய்கின்ற இறுதி சடங்கு கூட சரியாக செய்யப்படுவதில்லை மாதவிடாய் என்பது உடலில் ஏற்றப்படுகின்ற ஒரு மாற்றமே தவிர அது ஒரு தீட்டாக கருதுவது பெண்களை சமூக மட்டத்தில் ஓரம்கட்டி பார்ப்பது போன்றது என்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் பாடசாலைகளில் சமத்துவ ரீதியான பாலின கல்வி கற்றலை மேம்படுத்த வேண்டும் என்பதுடன் அரசாங்கமானது தற்போது பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் பயன்படுத்தும் நப்கின்ஸ்க்கு 15 வீத வரிகளை விதித்துள்ளது அந்த வரியானது எதிர் வரும் நாட்களில் குறைக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன் போது கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது .

# மின்சார வேலியில் சிக்கி உ பிள்ளைகளின் தாய் பலி



(க.கிஷாந்தன்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை சுரங்கப்பாதைக்கு கீழ் உள்ள சாந்த ஜனபதய எனும் பகுதியில் வீட்டிற்கு பின்புறத்தில் மரக்கறி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி 2 பிள்ளைகளின் தாய்யொருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் ஏ.எம்.சந்திரலதா வயது 48 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டார்கள் தங்களது மரக்கறி தோட்டத்தை மிருகங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக மின்சார வேலியை சட்டவிரோதமாக பொருத்தியுள்ளனர்.

குறித்த பெண் ஒவ்வொரு நாளும் தோட்டத்திற்கு செல்லும் போது மின்சாரத்தை துண்டித்துவிட்டு செல்வதாகவும் இன்றைய தினம் அதனை துண்டிக்காது மறந்து சென்றதனால் குறித்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பிரதேசவாசிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் நீதவானின் மேற்பார்வையின் பின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மாணவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் செயற்றிட்டம்






(ரக்ஸனா)

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் மாணவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் செயற்றிட்டத்தின் ஒன்றாக சித்தாண்டி வந்தாறுமூலை பிரதேசங்களை கருத்தில் கொண்டு மட்.ககு.வந்தாறுமூலை விஸ்ணு மகா வித்தியாலயம், மட்.ககு.வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளிலும் க.பொ.த உயர்தரத்தில் கணித விஞ்ஞான பிரிவுகளில் 2022இல் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களிற்கு இலவசமாக விசேட மேலதிக வகுப்புக்கள் நடத்தும் செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வு வியாழக்கிழமை(09) மட்.ககு.வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி தக்ஷஜானந்தர் மகராஜ் அவர்களும், கல்குடா வலயத்தின் திட்டமிடல் பிரிவு பிரதி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.துஸ்யந்தன் அவர்களும், இந்செயற்பாட்டினை ஒருங்கிணைப்பு செய்த விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்று பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் அவர்களும், இரண்டு பாடசாலையின் அதிபர்களான எஸ்.மோகன் மற்றும் ரி.முரளிதரன் ஆகியோரும் இச்செயற்பாட்டினை முன்னெடுக்கவிருக்கும் வளவாளர்களும், பயனாளிகளான மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு மனிதநேய நம்பிக்கை நிதியம் இலங்கை பூரகவும் செயற்றிட்டங்களை நடாத்தி வருகின்றது. அதில் ஒரு செயற்பாடாகவே கல்குடா வலயத்தில் கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்கள் உயர்தரத்தில் சித்தியடையும் வீதத்தினை அதிகரிக்கும் நோக்குடனே இலண்டன் மனித நேய நம்பிக்கை நிதியம் இதற்கான நிதியினை வழங்க முன்வந்துள்ளது என்றும், வலயக் கல்வி அலுவலகமும், பாடசாலை நிருவாகமும் பூரண ஒத்துழைப்பினை வழங்கியதன் அடிப்படையிலே இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியம் ஏற்பட்டதாகவும் இத்திட்டத்தை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் பாரிய விழிப்புணர்பு நடைபவனி!!








(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

16 நாள் செயல்வாத வாரத்தினை முன்னிட்டு பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லொதொழிக்க ஒன்றிணைவோம் எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பில் பாரிய விழிப்புணர்பு நடைபவனியொன்று நேற்று மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து பிரதான பஸ்தரிப்பு நிலையம் வரை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# வெள்ளத்தால் பாதிப்புகளுக்கு உள்ளாகிய மக்களுக்கு மன்னார் லயன்ஸ் கழகம் உதவிக்கரம்

( வாஸ் கூஞ்ஞ)

அண்மையில் மன்னார் பகுதியில் இடம்பெற்ற கன மழை காரணமாக மன்னார் மாவட்டம் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தது.

இதிலும் மன்னார் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மன்னார் தீவு மக்கள் இவ் மழை வெள்ளத்தால் சுமார் %5 வீதத்துக்கு மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளில் இருக்க முடியாத நிலையில் உறவினர்களின் வீடுகளிலும் பொது பாதுகாப்பு நிலையங்களிலும் நீண்ட தினங்களாக தஞ்சம் புகுந்தவர்களாக இருந்தார்கள் தொடர்ந்தும் இருந்து வருகின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு பிரதேச செயலகம் அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தினுாடாகவும், தனியார் மற்றும் அமைப்புக்கள் போன்றோர் தங்களால் இயன்ற அத்தியாவசிய உதவிகளை செய்துள்ளனர்;.

அந்தவகையில் அன்று தொட்டு சமூக பணியில் ஈடுபட்டு வரும் மன்னார் வயன்ஸ் கழகம் 304 பி எழுத்தூர் பகுதியில் இடம்பெயர்ந்து இருந்த 50 குடும்பங்களுக்கு





மன்னார் பிரதேச செயலாளர் எம் பிரதீபன் தலைமையில் உதவிக்கரம் நீட்டும் படங்கள்.

# வண. பிதா சந்ரு பேர்னாண்டோ சர்வதேச இசைக்கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத்தூதுவராக நியமனம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரும் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவருமான வண. பிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ சர்வதேச இசைக்கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு செற்படும் இந்த பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவராக சென்னை சுகஜீவ பேராலயத்தில் வைத்து கடந்த (06) திங்கட்கிழமை இவர் நியமனம் செய்யப்பட்டார்.



தமிழகத்தின் பிரபல தொழிலதிபர் வி.ஜி. பி. நிறுவனத்தின் உபதலைவரும் சுகஜீவிய பேராலயத்தின் தலைவருமான வி.ஜி.எஸ் . காடினல் செல்வராஜின் அழைப்பில் சென்ற அருட்கலாநிதி வண. பிதா எஸ். சந்ரு பெர்னாண்டோவிற்கு சிறப்பு விருதாக 'சாதனைச் சர்க்கரவர்த்தி' என்ற விருதும் இந்த நிகழ்வின் போது வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், வி.ஜி.பி. உலகத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி. சந்தோசம் அருட்கலாநிதி வண. பிதா எஸ். சந்ரு பெர்னாண்டோவிற்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்ததோடு, ஜெருசலேம் வேதாகமப் பல்கலைக்கழகத்தின் நினைவுச்சின்னத்தை பணிப்பாளர் எ.பி. நேசர் மற்றும் எட்டோ மிஷன் இந்தியா நினைவுச்சின்னத்தை பிஷப் இஸ்ரேல் ராஜப்பா ஆகியோர் வழங்கினர்.

# பட்டிருப்பு கல்வி வலயத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு



(இ.சுதா)

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட மண்முனை தென் எருவில் பற்று கோட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான உள்ளடங்கல் கல்வியின் அவசியம் மற்றும் மாணவர்களின் பாடசாலை இடை விலகல் தன்மையினை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பான விசேட செயலமர்வு பட்டிருப்பு கல்வி வலய முறைசாராக் கல்விக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் வளவாளர்களாக ஓய்வு நிலை முறைசாராக்கல்விப் பிரிவுக்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.லாபீர் மற்றும் ஆசிரிய ஆலோசகர் க.ஜமுனாகரன் உட்பட ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அங்கவீனமுற்ற நபர்களின் சுய உதவி அமைப்புகளை பாராட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விருது

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

ஆரம்ப சுகாதார சேவைகள் தொற்று நோய்கள் மற்றும் கோவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுவாபிமானி 2020 தேசிய விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு அபேகம வளாகத்தில் அமைச்சின் செயலாளர் சுனேத்ரா குணவர்தன தலைமையில் நடைபெற்றது.



அங்கவீனமுற்ற நபர்களின் சுய உதவி அமைப்புகளை பாராட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் சுய உதவி அமைப்புகளை பாராட்டும் தேசிய விருது வழங்கும் வைபவத்தில் தேசிய மட்டத்தில் விளைத்திறனான மாவட்ட உத்தியோகத்தருக்கான போட்டி பிரிவில் திருகோணமலை மாவட்ட செயலக சமூகசேவைகள் உத்தியோகத்தர் கா. சுகந்தினி இரண்டாம் இடத்தை பெற்றதுடன் மாவட்டத்திற்கும் பெருமையை ஏற்படுத்திக் கொடுத்தார்.

இவ்விருது இவருக்கு கிடைக்கப் பெற்றமை குறித்து திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள உட்பட திணைக்கள தலைவர்கள் தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சியில் ௨௭ விவசாயிகளுக்கு மின் மோட்டர்கள் வழங்கி வைக்கப்பட்டது





(த.சுபேசன்)

கைதடி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 27விவசாயிகளுக்கு 08/12 புதன்கிழமை மின் மோட்டர்கள்(நீர் இறைக்கும் இயந்திரங்கள் )வழங்கி வைக்கப்பட்டது.

வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் கொள்வனவு செய்யப்பட்ட மின் மோட்டர்களை பாராளுமன்ற உறுப்பினரும்,மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமநாதன் பயனாளிகளிடம் வழங்கி வைத்திருந்தார்.குறித்த நிகழ்வில் கைதடி கமநல சேவை திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் வாகீசன், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேல்,கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள்,பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# அம்பாறையில் ஆளுநரின் அலுவலகம் திறந்துவைப்பு

## கிழக்கு பிரதமசெயலாளரான பண்டாரநாயக்கவிற்கு பிரியாவிடை!





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் அம்பாறை மாவட்டத்திற்கான அலுவலகம், அம்பாறை நகரில் திறந்துவைக்கப்பட்டது. அம்பாறை அரசாங்க அதிபராகவிருந்து கிழக்கு மாகாண பிரதமசெயலாளராக பதவியுயர்வுபெற்ற டி.எம். எல்.பண்டாரநாயக்க ,சமய தலைவர்கள், பாதுகாப்புப்படை உயரதிகாரிகள் உள்ளிட்ட பல பிரதானிகளும் கலந்துகொண்டனர்.

ஆளுநரின் அம்பாறை மாவட்ட வாசஸ்தலத்திற்கு சமீபமாக ஆளுநரின் இவ் அலுவலகம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

ஆளுநருடன் சம்பந்தப்பட்ட அம்பாறை மாவட்ட சகல அலுவல்களும் இனிமேல் இங்கு மேற்கொள்ளப்டுமென தெரிவிக்கப்பட்டது.

காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில், சம்மாந்துறை பிரதேசசபை உதவிதவிசாளர் எ.அச்சிமொஹமட் உள்ளிட்ட




ஒருசிலஅரசியல் தலைவர்களும் கலந்துகொண்டனர்.காரைதீவு பிரதேசசஅபிவிருத்தி தொடர்பான மகஜரொன்றை தவிசாளர் ஜெயசிறில் ஆளுநரிடம் கையளித்தார்.

இதேவேளை, அம்பாறை அரசாங்க அதிபராகவிருந்து கிழக்கு மாகாண பிரதமசெயலாளராக பதவியுயர்வுபெற்ற டி.எம். எல்.பண்டாரநாயக்கவிற்கு மாவட்டசெயலகத்தில் பிரியாவிடைவைபவம் எளிமையாக நடைபெற்றது.

மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.பாக்கியராஜா உள்ளிட்ட உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.மாவட்ட செயலக அலுவலர்களும் கலந்துகொண்ட இவ்வைபவத்தில் பிரதமசெயலாளர் சகலருக்கும் நன்றிதெரிவித்து விடைபெற்றார்.

இன்னும் அம்பாறை மாவட்டத்திற்கென நிரந்தர அரசாங்கஅதிபர் ஒருவரும்நியமிக்கப்படவில்லை.நியமிக்கபப்டும் வரை பதில் அரசாங்கஅதிபராக மேலதிகஅரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் செயற்படுகிறார்.

# நாளை திருவெம்பாவை ஆரம்பம்!



(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

இந்துக்கள் அனுஸ்ட்டிக்கும் சிவ விரதங்களுள் ஒன்றான திருவெம்பாவை விரதம், நாளை(11)சனிக்கிழமை அதிகாலை ஆரம்பமாகின்றது. இவ்விரதத்தினை ஆருத்திரா தரிசனம் என்றும் அழைப்பர்.

நாளை தொடக்கம் 10தினங்கள் இவ்விரதம் அனுஸ்டிக்கப்படும். ஆலயங்களில் அதிகாலை திருவெம்பாவை சிறப்பு பூஜைகள் இடம்பெறும்.இவ்விரதம் எதிர்வரும் 20ஆம் திகதி திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும்.

அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பாடி அனைவரையும் துயிலெழுப்பி சிவபிரானுக்கு திருவெம்பாவை பாடுவது வழமை. அதேபோன்று இந்துக்கள் வாழும் கிராமங்களில் பொதுவாக அதிகாலை திருப்பள்ளியெழுச்சி ஊர்வலம் நடைபெறுவதும் வழமையாகும்.மேலும் சில ஆலயங்களில் திருவாசக முற்றோதல் இடம்பெறுவது வழக்கமாகும்.

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 09

# கிராமிய இசைக்கலைஞர் அமரர் அப்பாத்துரை சித்திரவேலாயுதம் கலைஞரின் சாதனைப் பயணம்!

**கலைகள் என்பது காலத்தை எதிரொலிக்கும் கண்ணாடியாக திகழ்கின்றது. இவை ஒரு நாட்டின் கலாச்சார பண்பாட்டினை தெள்ளத் தெளிவாக காட்டுவதற்கு உதவுகின்றன. கலைகள் என்ற வகைப் பாட்டினுள் ஆரம்பத்தில் தோற்றம் பெற்றவை கிராமியக் கலைகளாகவும், இவ் கிராமியக் கலைகளே பிற்காலத்தில் தோற்றம் பெற்ற கலைத் துறைக்கு வித்திட்டன எனக் கூற முடியும். இக் கலைகள் இயற்கையோடு ஒட்டி வாழும் கிராமத்து மக்களின் இயல்பான உணர்ச்சிகளிலிருந்து வெளிப்பட்டவையாகும். கால மாறுதலுக்கேற்ப இவ் உலகம் மாற்ற மடைந்து சென்றாலும், இக் கலைகள் தனது பண்பினை இழக்காமல் அவ்வண்ணமே இன்னும் ஓர் மூலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறான கிராமியக் கலையம்சங்களுள் கிராமிய இசைக்கலையும் ஒன்றாகத் திகழ்கின்றது. இவ் கலையுடன் தொடர்புடையவர்களை கோயிற் திருவிழாக்கள், மரபு ரீதியான சடங்குகளின் போது காணக்கூடியதாகவுள்ளது. அவ் வகையில், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், திருக்கோணமலை சல்லி சாம்பல்தீவு பிரதேசத்தினை வசிப்பிடமாகக் கொண்டவரும், தனது 10ஆவது வயதிலிருந்து 64வருடங்களாக இக் கலைத்துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வந்தவரும், 2007 இல் கலாபூஷணம் அரச விருதைப் பெற்றுக் கொண்டவருமான உடுக்கு இசைக்கலைஞர் அப்பாத்துரை சித்திரவேலாயுதம் கலைஞரின் சாதனைக் கலைப் பயணத்தின் தொகுப்பினை இங்கு காணலாம்.**



பிள்ளைப் பருவத்திலிருந்தே இவரது குரல் வளம் சிறப்பாக காணப்பட்டது. மற்றும் கல்வியிலும் கெட்டித்தனமாக காணப்பட்டார். இதனால் ஆசிரியர்களும் இவரில் விருப்பமாக இருந்தனர். இவரது 10ஆவது வயதில் பாடசாலையிலிருந்து பல விதமான நாடக போட்டிகளுக்கும், இசைக்கலை போட்டிகளுக்கும் சென்று வெற்றி பெற்று வந்தார். இதுவே இக் கலையில் இவர் ஈடுபடுவதற்கு முதற் தூண்டுகோளாக அமைந்தது. அதன் பின்னர், இவரது உறவினர் ஒருவரின் மூலம் சிந்துநடைக்கூத்து வடமோடி காத்தவராயன் நாடகத்தில் பாலகாத்தான் எனும் கதாபாத்திரத்தில் நடித்து எல்லோர் மத்தியிலும் மிகுந்த வரவேற்பையும், பாராட்டையும் பெற்றார். இதன் நிமித்தம் இவ்விரண்டு தூண்டுகோலின் மூலமாகவே, இக் கலையில் இவருக்கு ஆர்வம் ஏற்பட்டு ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

இவர் கிராமிய இசைக்கலையினை கோயிற் கும்பாபிஷேகம் திருவிழாக்கள் மற்றும் ஆலய விசேஷங்களின் ஜபௌர்ணமி தினம,; நேர்த்திக்கடன், விரதங்கள்ஸ போதும், தமிழர்களின் கலாச்சார அடையாளமான திருமணச்சடங்கில் கன்னிக்கால் நடுதல் வைபவத்தின் போதும் ஏனைய மரபு ரீதியான சடங்கின் போதும் பாடி வந்தவராவார். கூத்துப் பாடல்வகைகளில், வடமோடி, வசந்தன் கூத்து பாடல்களையும், பொழுது போக்கு சார்பானவற்றுள் கோலாட்டம், கிராமியக்கதைப் பாடல், வழிபாடு சார்பானவற்றுள், அம்மன் குளித்தல் பாடல், சிந்துப் பாடல், ஊஞ்சல் பாடல், கும்மிப்பாடல், காவடிப்பாடல், தெய்வமாடல்பாடல், தீப்பாய்தல் பாடல் போன்ற வகையிலான பாடல்களை அதற்கேற்ற சந்தர்ப்பங்களின் போது பாடி வந்தார். இக் கலைஞர் இவ்வாறான வகையிலமைந்த பாடல்களைப் பாடுவதற்கு பல பக்க வாத்தியங்களைப் பயன்படுத்தினார். உடுக்கு, பறைமேளம், மத்தளம், சல்லாரி, கஞ்சிரா போன்றன அவையாகும். எனினும் அவற்றில் பிரதான பக்க வாத்தியமாக உடுக்கையே இவர் அதிகம் பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனாலேயே இவரது கிராம மக்கள் இவரை உடுக்கு கலைஞர் என அழைத்தனர்.

இவர் தனது பிரதேசத்து சல்லி முத்துமாரியம்மன் கோவில், சம்பூர் நாகதம்பிரான் கோவில், மாதம்பை முருகன் கோவில், மாத்தளை முத்துமாரியம்மன் கோவில், திருக்கோணமலை பேர்ச்சியம்மன் கோவில் இவ்வாறாக பல இடங்களிலுள்ள கோயில்களுக்குச் சென்று தன் இசையால் இறைவனைப் பரவசமடையச் செய்ததோடு மட்டுமல்லாமல் அவ்வவ் கிராம மக்களினால் வரவேற்புப் பெற்றவருமாவார்.

இக் கலைத்துறையில் இவருக்கு பாராட்டுக்களும், விருதுகளும் கிடைத்துள்ளன. 2001இல் கௌரவ ஆளுநர் விருதும், 200%இல் அரச விருதான கலாபூஷணம் விருதும், 2013இல் வடமராட்சி வடக்குப் பிரதேச கலாச்சாரப் பேரவையினால் கலைப்பரிதி விருதும், 2014 இல் தமிழ்விழா விருதும், பிரதேச சாஹித்திய விருதும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனிதர் ஒவ்வொருவரின் வாழ்க்கையை நடாத்துவதற்கு பணம் என்ற பண்டமாற்று ஊடகம் மிக முக்கியமானதாகும். அவ் வகையில், இக் கலைத்துறையின் மூலம் போதியளவிலான வருமானம் இக் கலைஞருக்கு கிடைக்கவில்லை. இருப்பினும் இவ் தெய்வீகக் கலையிலுள்ள அளவற்ற பற்றினாலும், இவரது மனைவியின் பூரண ஒத்துழைப்பினாலும் இதனை முழு நேரத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர். சில ஏற்ற சந்தர்ப்பங்கள் கிடைக்கும் பட்சத்திலே வருமானமும், இது தவிர மாதாந்தம் உதவித் தொகை 2000 ரூபாயும் இவருக்கு கிடைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தமிழருடைய பாரம்பரிய பண்பாட்டான இக் கலையினை மற்றவர்களுக்கு கற்று கொடுப்பதற்கு இவரிடம் மிகுந்த ஆர்வம் இருந்தது. எனினும் அதற்கானவர்கள் இவரிடம் கிடைக்கவில்லை. காரணம் அவர்களில் சிலருக்கு இத்துறையில் நாட்டமில்லாமையும், பலருக்கு நேரம் போதாமையும் ஆகும். இவ்வாறான ஆதங்களுக்கு அப்பால் நம் தமிழரின் தனித்துவமிக்க பாரம்பரிய கலைகளில் ஒன்றாகத் திகழும் இக் கலையினை மானசீகமாக நேசித்து, முழு நேரத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து, தனது கிராமத்தில் மட்டுமல்லாது தன்னை பாடுவதற்கு அழைத்துச் செல்லும் கோவில்களுள்ள கிராமங்களிலும், ஒட்டு மொத்தமாக திருக்கோணமலை மண்ணுக்கு தனது குரலிசையால் கிராமிய இசையை மணக்க வைத்த பெருமைக்குரிய கலைச் சேவையாற்றிய எம் கலைஞர் 08.11.2015அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் எம் மண்ணை விட்டுச் சென்றாலும் அவரின் கிராமிய இசைக்குரல் அவர் இசைத்த இடத்திலெல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கின்றன இன்றும்!



கிராமிய இசைக்கலை சமுதாயத்தில் மருவிய நிலையிலுள்ளது குறித்து இளம் தலைமுறையினருக்கும், சமுதாயத்திற்கும் இவரின் எதிர்பார்ப்பாக, உலகளாவிய ரீதியிலே தொன்மையான தனக்கெனத் தனித்துவம் கொண்ட வாழ்க்கை முறையினைத் தமிழ்ச் சமுதாயம் கொண்டுள்ளது. தமிழ் மொழிக்கு வளமான இலக்கியமும், சிறந்த கட்டுக் கோப்பான இலக்கண நெறியுமுண்டு. இவ்வாறான சிறப்பு மிக்க தமிழரின் கலாச்சார அம்சங்களில் இவ் கிராமிய இசைக் கலையும் ஒன்றாகத் திகழ்கின்றது. நம்மவரின் கலாச்சாரத்தினை அறிவதற்கு எமக்கென கிடைத்த பழம்பெரும் கலையாகும். இப்படிபட்ட கலையின் மகிமை பற்றி அறிவதற்கும், ஆராய்வதற்கும், கற்பதற்கும்; மிகக் குறைந்தளவிலே இளம் சமுதாயத்தினர் நாட்டம் காட்டுகின்றனர். இத்தன்மையை மாற்ற வேண்டும். இனி வரும் சமுதாயத்தினர் இக் கலையினை கற்க முடியாவிட்டாலும் அதனை பேணிப் பாதுகாப்பதற்காவது முயற்சியெடுக்க வேண்டும். இதனை செயற்படுத்துவதற்கு உரிய பொறுப்பாளர்களும், ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் கவனத்தில் எடுக்க வேண்டும். காலத்தின் ஓட்டத்தில் சென்று கொண்டிருக்கும் நாம், எமக்குரிய தலை சிறந்த கலைச் சொத்துக்களையும் கால வெள்ளத்தில் அழிந்து விடாமல் பார்க்க வேண்டும். இன்னும் வெளிச்சத்திற்கு வராமல் புரையோடிக் கிடக்கும் எம் போன்ற கலைஞர்களை வெளிக் கொண்டு வாருங்கள். அவர்களுக்குரிய தகுந்த களத்தினை அமைத்து கொடுங்கள். என்பதே இவரது எதிர்பார்ப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக தனது கிராமிய இசைக் கலையின் மூலமாக நம் பாரம்பரிய அடையாளங்களை பேணிக் காத்து வந்ததோடு மட்டுமல்லாமல் அதனை சமுதாயத்தின் மத்தியில் பரவலாக்க முயற்சி செய்த எம் மண்ணின் புகழுக்குரிய கலைஞராவார். இவ்வாறான கிராமிய இசைக் கலை மட்டுமல்லாமல் வேறு பல கிராமியக் கலைகளை சேவையாகவும், தொழிலாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் பல கலைஞர்கள் வெளிச்சத்திற்கு வராமல் புரையோடிக் கிடக்கின்றனர். நம் திருக்கோணமலை நகரத்திலுள்ள கலைஞர்களுக்கான வரவேற்பினைப் போன்றே கிராமத்தில் கலைச் சேவையினை ஆற்றி வரும் சிறந்த கலைஞர்களுக்கான வரவேற்பையும், அவர்களுக்கான அடையாளத்தையும் கொடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உரிய நிர்வாகத்திற்கு உண்டு. அத்துடன் இவ்வாறான கலைஞர்களை வெளிக் கொண்டு வருவதன் மூலமாக எமக்குரிய தொன்மையான கலைகளும் பாதுகாக்கப்படும். இக் கலைகளை பாதுகாப்புடன் ஆவணப்படுத்தி வைப்பது மட்டுமல்லாமல் எதிர்கால சந்ததியினருக்கு பொக்கிஷமாக கொடுப்பதோடு உலகறியச் செய்வது எம் மண்ணில் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும். என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைகளை தேடுவதோடு மட்டுமல்லாமல் ஆத்மார்த்தமாக கலைச் சேவையினை ஆற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களையும் வாழும் போதே வாழ்த்துவோம்.!

**தொடரும் கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**



தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்



# மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான சர்வதேச தினமும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும்

2019 ஆம் ஆண்டு பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பான பதினாறு நாள் செயல்வாத வாரத்தினுள் பதினான்காவது நாள் ஐ.நாவினால் சர்வதேச மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 08 ஆந் திகதி; அனுஷ்;டிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையினைப் பொறுத்தமட்டில் இத்தினமானது முதன்முறையாக விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் கடந்த 2020 ஆம் ஆண்டிலிருந்து மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான உலகளாவிய தெற்குக் கூட்டணியுடன் (Global South Coalition for Dignified Menstruation) இணைந்து பல்வேறுபட்ட நிகழ்வுகளின் மூலமாக மக்களுக்கான கவனயீர்ப்பினை இத்தினத்தின் மீது மேற்கொண்டு வருகின்றது. கடந்த ஆண்டின் தொனிப்பொருளாக மாதவிடாய்க்கான மாண்பினைப் பேசுவோம் என்பது அமைந்திருந்தது. அதேபோன்று இவ்வருடத்திற்கான தொனிப்பொருளாக மாண்புடன் கூடிய மெனபோஸ் என்பதனை முன்னெடுக்கின்றோம். மாண்புடன் கூடிய மெனபோஸ் என்பது ஒரு மனித உரிமையே தவிர ஒரு வரப்பிரசாதம் அல்ல என்பதனை 2021 இல் வலியுறுத்தியே இவ்வாண்டுக்கான தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஒரு பெண்குழந்தையானது பூப்படைந்த காலம் முதல் அவள் மாதவிடாய்; சக்கரச் சுழற்சிக்கு உட்படுகின்றாள். மாதவிடாய் சுழற்சியானது சிக்கலானதும், பல்முகப்பட்ட உயிரியல்சார் நிகழ்வுமாகும். இதனை எங்களது சமூகத்தில் இன்றுவரை ஒரு விலக்காகவே நோக்கி வருகின்றனர். அதனால்தான் இன்று வரை எங்கள் சமூகத்தில் மாதவிலக்கு என்ற பொருளமைந்த பெயர்தான் மாதவிடாய்க்கும் வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு பெண் கருவறையிலிருந்து கல்லறை வரை மாதவிடாய்சார் பாரபட்சத்திற்கு உட்படுத்தப்பட்டே வருகின்றாள். ஆரம்பநாட்களில் அவளது நடமாட்டம் வரையறுக்கப்படுகின்றது. குறித்த சடங்குகள் நிகழ்வுகளில் அவளது பங்குபற்றல் மறுக்கப்படுகின்றது. வீட்டினுள் நடமாடவே அவளுக்கான வரையறைகள் காணப்படுகின்றன. அதிலிருந்து வெளியே வந்து பாடசாலைக் கற்றலின்போதும் அப்பெண் குழந்தையின் சுகாதாரப் பழக்க வழக்கங்கள் மறுதலிக்கப்படுகின்றன. குறிப்பாக அவளால் உரியமுறையில் மலசலகூடங்களினைப் பயன்படுத்துவதற்கோ அல்லது குறித்த நேரத்தில் தனது மாதவிடாய் அணையாடையினை (நாப்கின்கள்) மாற்றுவதற்கோ வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. தொடர்ச்சியாக அவள் அதனை அணிந்திருக்கும்போது அங்கு தொற்றுக்கள் எற்பட வாய்ப்புக்களேற்படுகின்றன. அதன் விளைவு அடுத்து வரும் தினங்களில் அச்சிறுமி நோய்வாய்ப்பேற்பட நேரிடும் போது அவளது தொடர் கற்றல் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறு மாதந்தோறும் நிலைமை தொடருமிடத்து அவளது ஆரோக்கியம் பாதிப்புற நேரிடுகின்றது. இது அவளது கல்வி அடைவுகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. நாம் எவ்வாறு சத்துணவு பற்றி முக்கியம் கொடுத்துப் பேசுகின்றோமோ அதே போன்று இவ்விடயத்துக்கும் நாம் முக்கியத்துவம் கொடுத்தேயாக வேண்டும். நாளைய எதிர்காலத்தினை உருவாக்கும் பாரிய பொறுப்பிலிருக்கும் அவளது உடல் ஆரோக்கியம் மிக மிக முக்கியமானது என்பதனை நாம் மறுக்கக்



கூடாது. அதேநேரம் ஒவ்வொரு பெண்ணினதும் பாலியல் இனப்பெருக்க சுகாதார உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை. இவற்றில் ஏற்படும் குறைநிலைகள் அவளது ஒட்டுமொத்த வாழ்வுக்கே உலை வைப்பதாக அமையகின்றன. இதனாற்தான் நாம் இன்று ஐம்பதுக்கும் மேற்பட்ட இளையோரை ஒன்றுதிரட்டி அவர்களுக்கு இவ்விடயம் சார் பயிற்சிகளினை வழங்கி அவர்கள் ஊடாகவே நாம் இளைய சமுதாயத்தினருக்கு விளக்கங்களினை வழங்க ஊக்குவிக்கின்றோம். இதில் இன மதபேதமின்றி இளையோர் இணைந்து தமது விழிப்புணர்வுசார் செயற்பாடுகளில் மாணவர்களையும் பெண்களையும் இணைத்து செயற்பட்டு வருகின்றனர். பேசாப்பொருளாகவிருந்த மாதவிடாய் பற்றி ஆண்களும் பேசி வருவது ஆணாதிக்க சிந்தனை மிக்க சமூகத்தில் ஓர் மாற்றமாக நோக்க முடிகின்றது. இந்நிலை தொடரும்பட்சத்தில் ஒவ்வொரு ஆணும் மாதவிடாய்க் காலங்களில் தனது தாய்க்கும், சகோதரிக்கும் மனைவிக்கும் உரிய ஆதரவினையும் மாண்பினையும் அளிக்கத் தவறமாட்டான். இதனை வலியுறுத்தியே இவ்வருட 16 நாள் செய்றபாட்டுவாத செயற்பாடுகளில் பெண்களுக்கெதிரான வன்முறைகளினை இல்லாமல் ஒழிப்பது தொடர்பில் எங்களது இளையோர் குழுக்கள் தமக்கான பதினாறுநாள் நாட்காட்டியினைத் தயாரித்து, அதில் பற்பல விடயங்களினைச் சுட்டிக்காட்டி நான் இன்று இவ்வாறு நடந்து கொள்வேன் அல்லது இந்தச் செய்றபாட்டினை இன்று முன்னெடுப்பேன் என அதனைத் தமது சமூகஊடகங்களிலும் பகிர்ந்து வருவதுடன் பல கருத்துப்பகிர்வுகளுக்கும் வழியேற்படுத்திக் கொடுத்து வருகின்றனர்.

மாதவிடாய்சார்ந்த தவறான மூடநம்பிக்கைகள் மற்றும் விலக்கினை நிலைத்திருக்கச்செய்தலானது மனிதவுரிமைகளை மீறுவதாகும். இதனாற்தான் இம்முறை மாதவிடாய்க்கு ஒப்பான இறுதி மாதவிடாய் அல்லது மாதவிடாய் நிறுத்தம் அல்லது மெனோபோஸ் பற்றிய கவனத்தினை செலத்த வேண்டியேற்பட்டது. குறிப்பாக பணியிலிருக்கும் பெண்கள் உடலளவிலும் மனதளவிலும் அதிகளவான குருதி வெளியேற்றத்தினால் பாதிக்கப்படுகின்றனர். அத்தருணத்தில் பணிபுரியுமிடங்களில் நிலைமையை விளக்கித் தமக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் தயக்கம். இறுதியில் பணியிலும் சிறப்பாகக் கவனத்தினைச் செலுத்த முடிவதில்லை. அதிக உளநெருக்கீடு மாற்றுவழியின்மை என பற்பல காரணிகளால் பாதிப்புக்களினை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக அவர்கள் கோட்பாட்டுரீதியாகவும் நடைமுறையிலும் உளவியல்ரீதியிலும் பல தாக்கங்களுக்கு உட்படுகின்றனர் என்பதே உண்மை. மாண்புடன் கூடிய மெனபோஸ் அல்லது மாதவிடாய் என்பது அவர்களுக்கான ஆரோக்கியம், நீர், சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பழக்க வழக்கங்கள், கல்வி, சுற்றுச்சூழல், மனிதவுரிமை மற்றும் வலுவூட்டல் என இன்னோரன்ன விடயங்களுடன் ஒருங்கிணைந்த விடயங்களாகவுள்ளன.

மெனோபோஸ் அல்லது மாதவிடாயசார்; பாரபட்சங்கள் எப்போதும் பால், பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் வடிவமாகவே நோக்கப்படுகின்றன. கருவறையில் ஆரம்பமாகும் இந்த பாரபட்சமானது ஒவ்வொரு மாதவிடாய் சுழற்சிக்கு உள்ளாகுபவரும் தமது இறப்பு வரை அல்லது சில கலாசாரங்களில் இறப்பின் பின்னரும் ஒதுக்கப்படுகின்றனர். ஐ.நாவின் வகைப்படுத்தலின்பிரகாரம் அடித்தல், உதைத்தல், கடித்தல், எரித்தல் என்பன உடலியல்ரீதியான வன்முறைகளாகவும் ஒதுக்கி வைத்தல், கலாசார நியமங்களினைக் காரணங்காட்டித் தண்டித்தல், பால்நிலை அடிப்படையிலான மொழிகளினைப் பாவித்தல், சொற்களினால் காயப்படுத்தல், தனிமைப்படுத்தல், சமூக ஒதுக்கம், இரக்கமற்று நடத்தல், அவமானப்படுத்தல் போன்றன உளவியல் ரீதியிலமைந்த வன்முறையாகவும் பாலியல் சுரண்டல் பாலியல் துஸ்பிரயோகம் பாலியல் வன்கொடுமையாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. அதேநேரம் சிறுமியருக்கான மாதவிடாயினைக் காரணங்காட்டி கல்வியுரிமை மறுக்கப்படல், சிறுவனுக்கு அல்லது ஆண்களுக்கு உணவு மற்றும் சேவைகளினைப் பெற முன்னுரிமை வழங்குதல் போன்றனவும் வெளிப்படையாகப் பாரபட்ச நிலைமையினைச் சுட்டிக் காட்டுவதாயுள்ளது. எனவே இந்த மாதவிடாய்சார் பாரபட்ச நிமைமையானது பால் மற்றும் பால்நிலையடிப்படையிலான வன்முறைகளிலிருந்து தோற்றம் பெறுவதுடன் அது மனிதவுரிமைகளினைப் பல வழிகளில் மீறுவதாகவும் உள்ளது. உதாரணமாக கல்விக்கான உரிமையினை மறுப்பது ஓர் மனிதவுரிமை மீறலாகும். அது சிறுவயதுத் திருமணம் மற்றும் கர்ப்பத்துக்கு வழிவகுக்கின்றது. இறுதியில் அவர்கள் பிள்ளைகளைப் பெறும்போது பல்வேறுவிதமான சிக்கல்களை ஏற்படுத்தி விடுவதுடன் அவர்களது பொருளாதார சந்தர்ப்பங்களினையும் நசுக்கி விடுகின்றது. எனவேதான் மாண்புடன் கூடிய மாதவிடாய் நாள் பெண்களுக்கெதிரான செயற்பாட்டு வாதத்தினுள் ஒரு மூலக்கூறாக உள்ளடக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் மொழியினைக் கையாளுதல் என்பது மிக முக்கியமானதாகும். ஏனெனில் மொழியுருவாக்கம் என்பது எமது மனதின் கட்டமைப்பினை வெளிப்படுத்துவதுடன் எமது நடத்தைகள் மனித நாகரிகத்தினை வெளிப்படுத்துவதாகவும் அமைபவை. எனவேதான் சேவை வழங்குனர்களது மொழி என்பது இங்கு முக்கிய விடயமாகக் கொள்ளப்படுவதுடன் மே மாதம் வரும் மாதவிடாய் சுகாதார நாள் என்பது அவர்கள் தண்ணீர், சுகாதாரம், சுகாதார உற்பத்திப் பொருட்கள் மற்றும் சமூக அடிக்கட்டுமானங்களினைக் கவனத்திற் கொள்வதனை அனைத்துத் தரப்பினருக்கும் நினைவுபடுத்துவதாக அமைகின்றது.

எங்களது நாட்டில் அண்மையில் மாதவிடாய் நாப்கின்களுக்கான வரியினை 15 சதவீதத்தினால் அதிகரித்த தன்மையானது அரசானது எவ்வாறு பெண்கள் மீதான பாரபட்ச நிலைமையினை உருவாக்கியுள்ளது என்பதனை வெளிக்காட்டுவதுடன் அரசதரப்பிலும் நாம் மாண்புடன் கூடிய மாதவிடாய் பற்றி தெளிவுபடுத்தல்களினை வழங்கவேண்டிய தேவைப்பாடு உள்ளதென்பதனை எமக்குச் சுட்டிக் காட்டுகின்றது. உண்மையில் இலங்கையில் வெறும் 30 சதவீதமானோரே மாதவிடாய் நாப்கின்களினைப் பயன்படுத்துவதுடன் ஏனையோர் பழைய துணிகளினைச் சுகாதாரத்துக்கு ஒவ்வாதவகையில் பயன்படுத்தி வருவதனையும் ஆய்வு முடிவுகள் காட்டி நிற்கின்றன. ஆனாலும் இம்முடிவுகள் எந்த விதத்திலும் மாதவிடாய்ச் சக்கரத்திலுள்ளோர் மீதான பாரபட்ச நிலைமையினைக் குறைக்கவில்லை. எவ்வாறாயினும் இவை தொடர்பான தொடர் ஆய்வுகள்தான் உண்மையான நிலைமைகளினை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதாக அமைவதுடன் கொள்கை வகுப்பாளர்களுடன் விடயங்களினைச்சமர்ப்பிப்பதற்கும் கொள்கைகளில் மாற்றங்களினைக் கொணரவும் அழுத்தம் கொடுக்கும் சான்றுகளாக அமையலாம்.

எமது குழந்தைப்பருவத்திலிருந்தே நாம் எமது வீடுகளில் மாதவிடாய்க் காலங்களில் எமது தாயார், சகோதரிகள் நடாத்தப்படும் விதங்களே அவர்களை இயலாதவர்களாக, தூய்மையற்றவர்களாக, தாழ்வுச்சிக்கல் கொண்டவர்களாக அதிகாரமற்றவர்களாகக் காட்டி வருவதனை அவதானித்திருக்கின்றோம். இந்நிலை இன்றுவரை தொடர்வதுதான் கவலைக்குரியது. காலங்களும் அறிவும் பரந்துபட்டளவில் மேம்பட்டிருந்தாலும் இன்னமும் எமது சில நடைமுறை வழக்கங்களில் மாற்றமில்லை. உதாரணமாக மட்டக்களப்பு பகுதிகளில் இன்றும் குழந்தைகள் பெற்றிருந்து குறிப்பிட்ட காலத்திற்கு உட்பட்டிருந்தாலோ அல்லது மாதவிடாய்ச் சக்கரத்திற்கு உட்பட்டிருந்தாலோ குறிப்பிட்ட திருவிழாக்காலங்களில் அவர்கள் ஆலயத்திற்கு அண்மித்த வீடுகளில் வசித்தால் அவர்கள் வேறு இடத்திற்குக் குழந்தைகளுடன் செல்லும் வழக்கம் இருப்பதனை அவதானிக்கலாம். ஒவ்வொரு மூன்று பெண்களிலும் ஒரு பெண் அவளது மாதவிடாயின்போது பாரபட்சமாக நடாத்தப்படுகின்றாள். நாம் பால்நிலை நீதியினையும் மனிதவுரிமையினையும் அடைய வேண்டுமாயின் 24 மணிநேரமும் ஏழு நாட்களும் மாதவிடாயினைக் கொண்டாடிக் கொண்டே இருக்க வேண்டும். நடைமுறையில் இது சாத்தியமில்லை அல்லவா? அதனாற்தான் அதன் முக்கியத்துவமும் அவசரமும் கருதி மாண்புடன் கூடிய மாதவிடாயைப் பற்றிப் பேச ஓர் நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அதுவும் மனிதவுரிமைகளினைப் பேசும் டிசம்பர் மாதத்தில் ஓர் நாள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் 1, 2, 3, 4, 5, 6 மற்றும் 8 போன்றவை மாண்புடன் கூடிய மாதவிடாய் மற்றும் மாண்புடன் கூடிய மெனோபோஸ் உடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புறுகின்றன. எனவேதான் நாம் பால்நிலை சமத்துவத்தினை எட்ட வேண்டுமாயின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செய்றபட வேண்டிய நிலையிலுள்ளோம். போரினாற் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இன்றுவரை அம்மக்கள் பல்வேறுவிதமான இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களது வாழ்விலும் மாற்றங்கள் எற்படுத்தப்பட வேண்டுமாயின் நாம் அனைவரும் பெண்களது உரிமைகளுக்காய் குரல் கொடுப்பவர்களாகவும் அவர்களுக்குரிய ஆதரவினை வழங்குபவர்களாகவும் இருக்கும் பட்சத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் பாரபட்சங்களும் இல்லாதொழிக்கப்படும். அதற்கான உறுதிமொழியினை இன்றைய மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான சர்வதேச நாளில் அனைவரும் மனதிலிருத்திக்கொண்டு செயற்படுவோமாக!

**இந்துமதி ஹரிகரதாமோதரன்**
இலங்கைக்கான இணைப்பாளர்
மாண்புடன் கூடிய மாதவிடாய்க்கான உலகளாவிய தெற்குக் கூட்டணி



MULTI CONSULTING
Versicherung&Finanz

வீடு விற்பனைக்கு
வீடு வாங்க அல்லது வாங்கிய உங்கள் வீட்டை விற்க, வாடகைக்கு விட...
MEHRFAMILIENHAUS + BAULAND ZU VERKAUFEN
Objekt:
1x 2-Zimmer Wohnung
1x 4.5-Zimmer Wohnung
1x 5-Zimmer Wohnung
2 Garagenparkplätze
Preis: 790.000 CHF
Ort: 4254 Liesberg Dorf (BL)
Baujahr: 1850
Grundstück: 740 m2
சமூக அக்கறை எமது இலக்கு!
079 765 50 57
www.multiconsulting.ch
Tel: 044 860 12 05
info@multiconsulting.ch
Im Rietpark 5, 8180 Bulach.ZH,

# கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிகளை நாங்கள் மறந்து விடவில்லை

## இரா.சாணக்கியன்

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிகளை நாங்கள் மறந்து விடவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை 08.12.2021 உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் நாடாளுமன்றில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடந்த சம்பவத் திற்கு எனது கண்டனத்தை நான் இவ்வேளை யில் பதிவு செய்கிறேன்.

எனது நண்பரான மனுஸ நாணயக்காரவுக்கு நடந்த இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த தற்போது பிரதி சபாநாயகர் தலைமை யில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் சில சிரேஸ்ட உறுப்பினர் களும் தொடர்புபட்டுள்ளார்கள்.

இதேபோன்ற சம்பவங்களுக்கு நானும் கடந்த காலங்களில் முகம் கொடுத்துள்ளேன். எனவே, இவை தொடர்பாக எதிர்க்காலத் தில் நடவடிக்கை எடுக்கப்படும் என நான் நம்புகிறேன்.

அதேபோன்று, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமார விஜேரத்தன தொடர்பாக நாடாளுமன்றில் பின்வரிசை உறுப்பினர் ஒருவர் வெளியிட்ட கூற்று தொடர்பாக, நான் ஒரு ஆண் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினியிடமும் ஏனைய பெண் நாடாளு மன்ற உறுப்பினர்களிடமும் இவ்வேளையில் மன்னிப்பைக் கேட்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி தொடர்பாக குறித்த உறுப்பினர் மிகவும் கீழ்த்தரமான கருத்தை வெளியிட்டிருந்தார். ஆனால், குறித்த உறுப்பினர் அவ்வாறான கருத்தை வெளியிடும்போது, அவரை சுற்றி அமர்ந்திருந்த உறுப்பினர்கள் அதைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தமையானது, உறுப்பி னரின் அந்தக் கருத்தைவிட கேவலமானது.

அந்த இளம் நாடாளுமன்ற உறுப்பின ரின் தாய் மற்றும் சகோதரிகளிடமும் நாம் மன்னிப்பைக் கேட்ட வேண்டும். இவர்கள் மட்டுமன்றி, நாட்டிலுள்ள ஒட்டுமொத்த பெண்களிடமும் நாம் மன்னிப்புக் கோர வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, இதுதொ டர்பாக நடவடிக்கை எடுத்து குறித்த உறுப் பினரை இரண்டு வாரங்களுக்கேனும் நாடா ளுமன்றிலிருந்து இடைநிறுத்தம் செய்து, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்துகிறேன்.



இதனை மேற்கொள்ளாது விட்டால் அது பிழையான உதாரணமாக மாறிவிடும் என்ப தையும் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

வடக்கு கிழக்கில் உள்ள தொழிற்சா லைகளை அரசாங்கம் புதுபிக்க வேண்டும் என்பதோடு, அங்கு புதிய தொழிற்சாலைக ளையும் ஸ்தாபிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஏற்கனவே, தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் வரையிலான கப்பற்சே வையை மீள ஆரம்பிக்க வேண்டும் என அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளேன்.

அத்தோடு, மட்டக்களப்பு விமாநிலையம், பலாலி விமான நிலையங்களை மீள செயற் பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளேன். குறைந்தது பொலன் னறுவையிலிருந்து வரும் புகையிரதத்தை யேனும் மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்கு மாறு கேட்டிருந்தேன். ஆனால், இவையெ துவும் இன்றுவரை நடக்கவில்லை.

பிரதேசங்களுக்கிடையில் ஒரு தொடர்பு இல்லாவிட்டால் எம்மால் பொருளாதார ரீதி யாக எதனையும் செய்ய முடியாது. வடக்கு கிழக்கில் உள்ள தொழிற்சாலையொன்றில் உருவாக்கப்படும் ஒரு தயாரிப்பை, இங் குள்ள துறைமுகத்திற்கு கொண்டுவரும் போது, அந்த தயாரிப்பில் உள்ள பெறுமதியே இல்லாது போய்விடும்.

வடக்கு கிழக்கில் தொழிற்சாலைகளை உருவாக்குதாயின், ஒரு இணைப்பு இன்றி அவற்றை மேற்கொள்ள முடியாது. கிழக்கில் சில ஆடைத் தொழிற்சாலைகள் இருக்கின் றன. எனினும், இந்தத் தொழிற்சாலைகளின் கிளைகள் இலங்கையின் ஏனைய இடங்க ளிலும் இருப்பதால்தான் அவை லாபகரமா னதாக இயங்குகின்றன.

எனினும், புதிதாக ஒரு தொழிற்சாலையை இந்தப் பிரதேசங்களில் ஆரம்பிக்க வேண் டுமெனில், நிச்சயமாக போக்குவரத்து உள் ளிட்ட இணைப்புக்களை அரசாங்கம் ஏற்ப டுத்தியே ஆகவேண்டும்.

புன்னக்குடா எனும் பகுதியில் 260 ஏக்கரில், ஆடைத்தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஊடகங் கள் வாயிலாக அறியக்கிடைத்து.

புன்னக்குடா என்பது கிழக்கில் உள்ள மிக வும் அழகான கடல் பிரதேசமாகும். ஆனால், இங்கு இவ்வாறானதொரு தொழிற்சாலையை ஸ்தாபிப்பது எவ்வளவு தூரத்திற்கு சாத்தியம் என்பது விளங்கவில்லை.

மாறாக, இங்கு சுற்றுலாத்துறையை மேம் படுத்தும் திட்டங்களை அரசாங்கம் கொண் டுவந்தால் வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

அத்தோடு, வர்த்தக அமைச்சர் விமல் வீரவன்ஸவையும், சுற்றுலாத்துறை அமைச் சரையும் தோற்கடிக்க வேண்டுமென்றுதான் இந்த அமைச்சுக்களுக்கு இவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்களா எனும் சந்தேகமும் எமக்கு எழுகிறது.

ஏனெனில், நாட்டில் தற்போதைய நிலை மையில் இந்த இரண்டு துறைகளும் பாரிய வீழ்ச்சியடைந்துள்ளன.

இவ்வாறான நிலையில், கொழும்பு மற் றும் கம்பஹாவில் அதிகூடிய விருப்பு வாக்கு பெறும் இவர்கள் இருவரின் செல்வாக்கையும் வீழ்த்த திட்டமிட்டுத்தான் இந்த அமைச் சுக்கள் வழங்கப்பட்டதோ என்றும் எமக்கு தோன்றுகிறது. மேலும், நாட்டில் இன்று டொலர் வருகை இல்லாது போயுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், ஒரு நாடு ஒரு சட்டம் எனும் செயலணியின் தலைவ ரான கலகொட அத்தே ஞானசார தேரர், நாட் டில் எவ்வேளையிலும் குண்டுத் தாக்குதல் இடம்பெறலாம் என்று அரச ஊடகங்கள் முன்பாக கருத்து வெளியிட்டுள்ளார்.

நான் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கன டா, பிரித்தானியா மற்றும் அமெரிக்காவக்கு விஜயம் மேற்கொண்டிருந்தேன். இங்குள்ள முதலீட்டாளர்கள், நாட்டுக்குள் வர அச்சப் படுகிறார்கள்.

நாட்டில் எவ்வேளையிலும் குண்டுத்தாக்கு தல் இடம்பெறலாம் என்றால், எப்படி வந்து முதலீடு செய்வது என எம்மிடம் அவர்கள் கேள்வி கேட்கிறார்கள்.

ஒரு நாடு ஒரு சட்டம் எனும் செயணி ஊடாக, இலங்கைக்கு வரவுள்ள டொலர் கள் இல்லாமல் போகும் அபாயம் ஏற்பட் டுள்ளது. எதிர்க்காலத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையும் இல்லாதுபோகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்படியே சென்றால், இலங்கையில் எந்தவொரு வியாபாரமும் செய்ய முடியாத நிலைமை ஏற்படலாம்.

பாகிஸ்தானின் கடந்த சில நாட்களுக்கு முன்னர், பிரியந்த குமாரவுக்கு நிகழ்ந்த துன்பி யல் சம்பவம் தொடர்பாக எனது கவலையை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபகங்களையும் கூறிக்கொள்கிறேன். இந்தச்சம்பவம் தொடர்பாக எமது இளை ஞர்கள் இன்று சமூக வலைத்தளங்கள் ஊடாக தொடர்ச்சியாக அனுதாபங்களையும் எதிர்ப் புக்களையும் தெரிவித்து வருகிறார்கள்.

ஆனால், அதேபோன்ற சம்பவங்கள் எமது நாட்டிலும் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ள மையை நான் நியாபகப்படுத்த விரும்புகி றேன். 1956 5% களில் நடைபெற்ற கிளர்ச்சி யின்போதும், இதற்கு சமமான சம்பவங்கள் இங்கும் நிகழ்ந்துள்ளன. அதுவும் அரசாங் கத்தின் அங்கீகாரத்துடன் தான் இவை நிகழ்த் தப்பட்டன.

குறிப்பாக தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். 1983 கலவரத்தின்போது இலங்கை வாழ் தமிழர்கள் நடு வீதிகளில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்கள். இவை தொடர்பான புகைப்படங்கள் இன் றும் காணப்படுகின்றன.

அதேபோன்று, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டார். இவ ரது கொலைக்கு யார் காரணம் என இங்குள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக்கூட தெரிந்திருக்கலாம்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கத்தை கொலை செய்தார் எனும் குற்றஞ்சாட்டுள்ள ஒருவர் இன்றும் நாடாளு மன்ற உறுப்பினராக இருந்து வருகிறார்.

பாகிஸ்தானில் இடம்பெற்றதைப் போன்று இலங்கையில் பல சம்பவங்கள் தொடர்ச்சி யாக இடம்பெற்றுள்ளன. 1956 ஆம் ஆண்டில் இலங்கையில் விடுதலைப்புலிகள் எனும் அமைப்பே இருக்கவில்லை.

1948 முதல் 1978 வரையான காலப்பகுதியில் அரசியல் உரிமைக்காக தமிழ்த் தரப்புக்கள் அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளையே மேற்கொண்டார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்த காரணத்தினால் தான் தமிழ் இளைஞர்கள் அன்று ஆயுதம் ஏந்தினார்கள். பாகிஸ்தானில் மத அடிப் படைவாதத்தினால் தான் இந்த சம்பவம் இடம்பெற்றது.

ஆனால், ஒருநாடு ஒரு சட்டம் என்பதன் ஊடாக இலங்கையில் பௌத்த அடிப்படை வாதம் தலைத்தூக்கியுள்ளது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிழக்கு மக்கள் அனைவரும் இந்த செயல ணிக்கு எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார்கள். ஒரு நாடு ஒரு சட்டம் என்பதை வைத்து நாட்டை ஒருபோதும் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்பதை அனை வரும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

நாம் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க வேண் டுமென்றோ, ஆட்சியைக் கைப்பற்ற வேண் டுமென்றோ ஒருபோதும் நினைக்கவில்லை. மாறாக பொருளாதாரத்தை வளர்க்கவம் நாட் டின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இணைந்து செயற்படத் தயார் என்பதையே கூற விரும்பு கிறோம். எனக் குறிப்பிட்டுள்ளார்.

# சிறுபான்மை இனங்களின் உரிமைப் போராட்டத்திற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முன்மாதிரி

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



பல்லினங்கள் வாழ்கின்ற இந்நாட்டில் ஜனநாயக சூழலில் ஒரு சிறுபான்மை இனத்தின் உரிமைப் போராட்டத்தை எவ் வளவு பக்குவமாகவும், நேர்மையாகவும், வீரியமாகவும் முன்னெடுக்க முடியுமென் பதற்கான நிறைய படிப்பினைகளை இந் திய யூனியன் முஸ்லிம் லீக்கினூடாக நாம் கற்றிருக்கின்றோம்.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவ ரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

தற்போது இலங்கைக்கு வருகை தந்தி ருக்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் மற்றும் அவரது குழுவி னர்,இங்குள்ள சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்திய பிரதி உயர் ஸ்தா னிகர் வினோத் கே.ஜேகப் ஆகியோருக்கு பத்தரமுல்லை 'வோடர்ஸ் எட்ஜ்' ஹோட் டலில் செவ்வாய்க் கிழமை (7)இராப்போ சன விருந்துப சாரமளித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீனுட னான எங்களது நட்பு நீண்ட நாட்களாக நிலவி வருகின்றது.இந்தியாவில் அவரு டைய இயக்கம் நாடு தழுவியது. இந்திய துணைக் கண்டத்தில் வாழ்கின்ற முஸ்லிம் களின் சார்பில் அவர் முன்னெடுக்கின்ற மிக சாணக்கியமான அரசியல் நகர்வுகள் இந்த நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களுக்கும் சிறந்த முன்னுதாரணங்களாக இருக்கின்றன.

பல்லினங்கள் வாழ்கின்ற இந்நாட்டில் ஜனநாயக சூழலில் ஒரு சிறுபான்மை இனத்தின் உரிமைப் போராட்டத்தை எவ் வளவு பக்குவமாகவும், நேர்மையாகவும், வீரியமாகவும் முன்னெடுக்க முடியுமென் பதற்கான நிறைய படிப்பினைகளை இந் திய யூனியன் முஸ்லிம் லீக்கினூடாக நாம் கற்றிருக்கின்றோம்.

இஸ்மாயில் சாஹிப் தொடக்கம் மத்திய அமைச்சர் யஹ்யா அஹ்மட், அவருக்கு பின் னர் இங்கு வீற்றிருக்கின்ற பேராசிரியர் காதர் மொகிதீன் ஆகியோர் அனைவரும் இந்திய உப கண்டத்தில் வாழ்கின்ற முஸ்லிம்கள் அனைவருக்கும் ஜனநாயக ரீதியில் எவ்வா றான அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பது குறித்த நல்ல வழிகாட்டுதல்களைத் தந்திருக்கிறார்கள்.

பேராசிரியர் காதர் மொகிதீன் திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் பிறந்து, ஒரு பத்திரிகையாளராக தன்னுடைய தொழிலை ஆரம்பித்து, சென்னை பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பிரிவில் மேற்படிப்பை முடித்த பின்னர் திருச்சி ஜமால் முஹம்மத் கல்லூ ரியில் வரலாற்று துறைப் பேராசிரியராக நீ ண்ட காலம் கடமையாற்றியிருக்கின்றார். இலங்கையை சேர்ந்த மாணவர்கள் பலர் அவரிடத்தில் கற்றுத் தேறியிருக்கின்றார்கள்.

தன்னுடைய இளமைக் காலத்தில் அரசி யலில் ஆர்வம் கொண்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்குடைய இளைஞர் அணியின் முக்கிய தலைவராக இருந்து, அதன் பின்ன ரான அரசியல் பயணத்தில் இந்திய லோக் சபா உறுப்பினராக வேலூர் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். பல்வேறு கால கட்டங்களில் தமிழ் நாட்டிலும், ஏனைய இடங்களிலும் இருக்கின்ற பள்ளிவாசல்க ளையும், ஜமாஅத்துகளையும் ஒன்றுபடுத் தி,அவற்றைப் பெரியதோர் அமைப்பாக அணி திரட்டி முன்னுதாரணமான நடவடிக் கைகளை மேற்கொள்வதில் வெற்றிகண்ட தலைவராக அவரை நான் காண்கின்றேன்.

நாங்கள் சென்னை செல்கின்ற போதெல் லாம் இன்முகத்துடன் எங்களை வரவேற்று அவர் அளிக்கின்ற விருந்துபசாரங்கள் மட்டு மல்ல,உயர் மட்டத்தில் எங்களுக்கு ஏற்ப டுத்தி தருகின்ற அரசியல் தொடர்பாடல்கள் இந்த நாட்டு முஸ்லிம்களுக்கு நிறைய உதவி யாக இருந்துவருக்கின்றன.

இன்று தமிழக முதலமைச்சர் தளபதி மு.கா. ஸ்டாலினின் ஆட்சியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முக்கிய பங்காளிக்கட்சிக ளில் ஒன்றாகும் நாட்டில் நெருக்கடியான இந்தச் சூழ்நிலையில் , அவருடைய வரு கையையிட்டு அவசரமாக ஏற்பாடு செய்த இந்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும் என்றார்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த, பாராளுமன்ற உறுப்பினர் களான செல்வம் அடைக்கலநாதன், மனோ கணேசன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார், பைசல் காஸிம், எச்.எம்.எம் ஹரீஸ், எம்.எஸ்.தௌபீக், ஹாபிஸ் நசீர் அஹமட், முஸ்லிம் காங்கிரஸ் செய லாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.அஸ்லம்,மூத்த ஊடகவியலாளர் என்.எம்.அமீன்,பாராளு மன்ற ஆய்வுப் பிரிவின் உயரதிகாரி அஜ்வ தீன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# காரைதீவில் உளவியல் பயிற்சி



கடந்த காலத்தை குணப்படுத்தி எதிர்கா லத்தை கட்டியெழுப்புதல் தொடர்பான பயிற்சி கலந்துரையாடல் தெரிவு செய்யப் பட்ட காரைதீவு பிரதேச செயலக உத்தி யோகத்தர்களுக்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான செயல கத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் உதவி பிர தேச செயலாளர் எஸ் பார்த்தீபன் தலை மையில் சமூக சேவை உத்தியோகத்தர் கு.குணரெட்ணத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் வளவாளராக ஜெனிதா மோகன் மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செய





லகத்தின் கலாசார உத்தியோகத்தர் ரி. பிரபாகரன் ஆகியோர் பயிற்சி கலந்துரை யாடலை நேற்று முன்தினம் (9) நடத்திய போது....

(படம். காரைதீவு நிருபர் சகா)




# வரவேற்புவளையிக்கான நிதி வீணாக திரும்பிப் போகும் நிலையில்..
## அடிக்கல்நட்டு 3 வருடங்களாக எதுவுமே நடைபெறவில்லையென மக்கள் விசனம்!

(காரைதீவு நிருபர்
வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு தென்புறஎல்லையில் வரவேற்புவளையியை நிருமாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி 3வருடகாலமாக பயன்படுத்தப்படாத காரணத்தினால் மீளத்திரும்பிப்போகும் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக கூறப்படுகிறது.

இதற்காக மூன்றுவருடங்களுக்குமுன் அடிக்கல் நடப்பட்டது. ஆனால் இன்னும்; ஒருசாண்கூட நகராமல் அப்படியே கிடப்பது குறித்து காரைதீவு பொதுமக்கள் விசனம் தெரிவித்துவருகின்றனர்.

தற்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசஅதிபரான வே.ஜெகதீசன் காரைதீவு பிரதேசசெயலாளராகவிருந்த 2018 ஆம் ஆண்டு இதற்கான அடிக்கல்நடுவிழா கோலாகலமாக நடைபெற்றது.

காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் அதற்கான 85லட்சருபா நிதியை முன்னாள் அமைச்சர் மனோகணேசனிடமிருந்து பெற்று பிரதேசசெயலகத்திடம் கொடுத்திருந்தார்.அமுல்படுத்தும் பொறுப்பு வீதிஅபிவிருத்திஅதிகாரசபையின் நிருமாணத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும் நிருவாகநடவடிக்கைகள் காரணமாக தாமதமடைந்துவந்தது.சுமார் இருவருடகாலமாக இக்கட்டுமானப்பணி இழுபட்டுவந்தது.

இந்தநிலையில் 2020நவம்பர் மாதம் 16 ஆம் திகதி இதன் கட்டுமானப்பணிளை மீள ஆரம்பிக்குமுகமாக பிரதேச செயலாளர் தவிசாளர் மற்றும் வீதிஅபிவிருத்திஅதிகாரசபை உயரதிகாரிகள் கூடி களத்திற்குச்சென்று உரிய இடத்தை நிருமாணத்திணைக்களத்திற்கு வழங்கியிருந்தனர்.இருந்தபோதிலும் இன்றுவரை அப்பணி ஆரம்பமாகவில்லை. அடிக்கல் நடப்பட்ட இடம்கூட தெரியாதநிலையில் உள்ளது.

இது தொடர்பாக அங்கு மக்கள் கருத்துரைக்கையில்:

3வருடத்திற்குமுன்பு அடிக்கல்நடப்பட்ட போதிலும் இன்னும் வரவேற்புவளையியைக்காணாமல் கவலையடைகின்றோம். ஏனைய சில ஊர்களில் நினைத்தமாதிரி இத்தகைய வளையிகளைக் கட்டுகிறார்கள்.ஆனால் இங்குமட்டும் ஏகப்பட்ட தடைகள் நடைமுறைகள். இருந்தும் 3வருடமாக இழுபட்டுவருகிறது என்றால் வெட்கமாகவிருக்கிறது. இதற்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் தவிசாளர் வீதித்துறையினர் பதிலளிக்கவேண்டும். என்றனர்.





தவிசாளர் கி.ஜெயசிறில் கருத்துரைக்கையில்:

காரைதீவு தென்புலஎல்லையில் வரவேற்புவளையி அமைக்கவேண்டும் என்ற பொதுமக்களின் நீண்டநாள் ஆசையை நிறைவேற்றுமுகமாக நான் எனது சொந்தப்பணத்தைச்செலவழித்து கொழும்புசென்று முன்னாள் அமைச்சர் மனோகணேசனிடம் 85லட்சருபா பணம் பெற்று பிரதேசசெயலகத்திடம் பணியை ஒப்படைத்தேன்.

அதனிடையே துறைசார்ந்த ஊர்ப்பிரதிநிதிகளை அழைத்து எவ்வாறு இந்த வரவேற்புவளையி வரவேண்டும் என்ற ஆலோசனையையும் பெற்றிருந்தேன். அதன்படி முறைப்படி உரியவர்களிடம் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்பட்டன.

இதன்கட்டுமானப்பணியை கட்டடத்திணைக்களத்திடம்ஒப்படைத்து வீதிஅபிவிருத்திஅதிகாரசபையின் நிருமாணப்பிரிவு முன்னெடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அறிந்தேன்.

ஆனால் இதுவரை ஒருஅடி கூட நகரவில்லை. 3வருடத்திற்கு என்னநடந்தது?.



தமிழப்பிரதேசம் என்பதாலா இந்த இழுத்தடிப்பு?பொதுமக்களைப் போன்றே நானும் கவலையடைகிறேன். தாமதத்திற்குகாரணம் என்னவென்றுகூடத்தெரியவில்லை என்றார்.

பிரதேசசெயலாளர் சிவ. ஜெகராஜனிடம் கேட்டபோது:

பொதுமக்களின் கவலை நியாயமானதுதான். வீதிஅபிவிருத்திஅதிகாரசபையிடமிருந்து நிருமாணத்திணைக்களத்திற்கு உரிய வரவேற்புவளையியின் திட்டஅங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் வடிவமைப்புக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறவில்லையெனத் தெரிகிறது. அதன்காரணமாகவே இத்தாமதம் நிலவுகிறது என்றார்.

உரியதரப்பினர் இவ்வரவேற்பு வளையியை இனியாவது அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா? என பொதுமக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர்.

# விரும்பிய சுபீட்சத்தை அடைவதற்கு
## தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வோம்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

இலங்கைக்கு அரிசி வழங்கும் அம்பாறை மாவட்ட மக்கள் விரும்பிய சுபீட்சத்தை அடைவதற்கு தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வோம் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கிழக்கின் வரலாற்றில் முதல் தடவையாக அம்பாறையில் ஆளுனர் அலுவலகம் திறக்கப்பட்டது, அந்த சுபீட்சத்தின் நோக்கத்தை அடைய மக்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டும்.

அம்பாறை தீககாமினி மாவத்தையில் நேற்று முன்தினம் (8) காலை அம்பாறை மாவட்ட அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் உரையாற்றிய ஆளுனர் அனுராதா யஹம்பத்,

இலங்கையின் மிக நீளமான மாகாணசபை எமது மாகாணம் என்பதுடன் மாகாணத்தில் உள்ள அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களும் திருகோணமலையை தளமாகக் கொண்டவை. மாகாணசபை கலைக்கப்பட்டதன் காரணமாக மாகாண அரச பொறிமுறையில் மாவட்ட மட்டத்தில் தற்போதுள்ள மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்பு இல்லை. மாகாண சபையின் அனைத்து நடவடிக்கைகளும் ஆளுநர் அலுவலகத்தின் ஊடாகவே கண்காணிக்கப்படுகின்றன. அம்பாறை மாவட்டத்தின் தெஹியத்தகண்டி, மஹா ஓயா, பதியத்தலாவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இந்த அப்பாவி மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மிகவும் சிரமத்துடன் திருகோணமலைக்கு வரவேண்டியுள்ளது. அந்த அமைப்பை மாற்ற வேண்டும் என்று நீண்ட நாட்களாக விரும்பினேன். இன்று முதல் அம்பாறை மக்கள் தமது பிரச்சினைகளை தீர்க்க திருகோணமலைக்கு வர வேண்டிய அவசியமில்லை. இன்று முதல் இந்த அலுவலகத்தில் இருந்து பணிகள் மேற்கொள்ளப்படும். இலங்கைக்கு அரிசி வழங்கும் மாவட்டம் அம்பாறை. ஆனால் இம்மாவட்டம் எதிர்பார்த்த செழிப்பை இன்னும் அடையவில்லை என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே, இந்த அலுவலகத்தின் மூலம் அந்த செழுமைக்கான நோக்கங்களை அடைய நாங்கள் நம்புகிறோம். இன்று நமது பகுதியில் இயற்கை விவசாயம் தொடங்கியுள்ளது. ஜனாதிபதியின் சுபீட்சத்தின் தொலைநோக்குப் பார்வையின் ஊடாக, செழிப்பு கிழக்கு எனும் விசேட தொலைநோக்கு பார்வையை அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.



எங்கள் பகுதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளின் கூரைகளைப் பயன்படுத்தி சூரிய சக்தியை உருவாக்கும் புதிய திட்டத்தை நாங்கள் தொடங்கினோம். ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

மாகாண பிரதம செயலாளர் டி.எம். எல் பண்டாரநாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சாமர நிலங்க, மாகாண முன்பள்ளி பணியகத்தின் தலைவர் பிரதீப் தென்னகோன், அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அம்பாறையில் ஆளுநரின் அலுவலகம் திறந்துவைப்பு
## கிழக்கு பிரதமசெயலாளரான பண்டாரநாயக்கவிற்கு பிரியாவிடை!

(காரைதீவு நிருபர்
வி.ரி.சகாதேவராஜா)



கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் அம்பாறை மாவட்டத்திற்கான அலுவலகம், அம்பாறை நகரில் திறந்துவைக்கப்பட்டது. அம்பாறை அரசாங்க அதிபராகவிருந்து கிழக்கு மாகாண பிரதமசெயலாளராக பதவியுயர்வுபெற்ற டி.எம்.எல்.பண்டாரநாயக்க ,சமய தலைவர்கள், பாதுகாப்புப்படை உயரதிகாரிகள் உள்ளிட்ட பல பிரதானிகளும் கலந்துகொண்டனர்.

ஆளுநரின்அம்பாறை மாவட்ட வாசஸ்தலத்திற்கு சமீபமாக ஆளுநரின் இவ் அலுவலகம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

ஆளுநருடன் சம்பந்தப்பட்ட அம்பாறை மாவட்ட சகல அலுவல்களும் இனிமேல் இங்கு மேற்கொள்ளப்டுமென தெரிவிக்கப்பட்டது.

காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில், சம்மாந்துறை பிரதேசசபை உதவிதவிசாளர் எ.அச்சிமொஹமட் உள்ளிட்ட ஒருசிலஅரசியல் தலைவர்களும் கலந்துகொண்டனர்.காரைதீவு பிரதேசசஅபிவிருத்தி தொடர்பான மகஜரொன்றை தவிசாளர் ஜெயசிறில் ஆளுநரிடம் கையளித்தார்.

இதேவேளை, அம்பாறை அரசாங்க அதிபராகவிருந்து கிழக்கு மாகாண பிரதமசெயலாளராக பதவியுயர்வு பெற்ற டி.எம்.எல்.பண்டாரநாயக்கவிற்கு மாவட்டசெயலகத்தில் பிரியாவிடைவைபவம் எளிமையாக நடைபெற்றது.

மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே.பாக்கியராஜா உள்ளிட்ட உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.மாவட்டசெயலக அலுவலர்களும் கலந்துகொண்ட இவ்வைபவத்தில் பிரதமசெயலாளர் சகலருக்கும் நன்றிதெரிவித்து விடைபெற்றார்.

இன்னும் அம்பாறை மாவட்டத்திற்கென நிரந்தர அரசாங்கஅதிபர் ஒருவரும்நியமிக்கப்படவில்லை.நியமிக்கப்படும்வரை பதில் அரசாங்கஅதிபராக மேலதிகஅரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் செயற்படுகிறார்.

# கட்டுமுறிவு கிராமத்தில் பாம்பு தீண்டி
## உயிரிழந்த சிறுமியின் குடும்பத்துக்கு புதிய வீடு
**இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனால் ஆரம்பித்து வைப்பு!**

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



வாகரை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கட்டு முறிவு கிராமத்தில் வருமானம் குறைந்த குடும்பம் ஒன்றுக்கு தேசிய வீடமைப்பு அதிகரசபையின் ஊடாக, புதியவீடு அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பின்தங்கிய பிரதேசமான கட்டுமுறிவு கிராமத்தில், ரவித்திரன் கிருத்திகா எனும் 4 வயது சிறுமிக்கு பாம்பு கடித்தது. அக்கிராமத்துக்கான பாதை சீரற்ற நிலையில் காணப்பட்டமையினால் மூன்று மணித்தியாலயத்தில் பின்பே கதிரவெளி பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்ட, குறித்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

சிறுமியின் உயிர் இழப்பு பிரதேச மக்கள் மத்தியில் பாரிய சோகத்தை ஆழ்த்தியிருந்தது. அந்த சந்தர்ப்பத் தில் கதிரவெளி வைத்தியசாலைக்கு விரைந்த இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், உயிரிழந்த சிறுமியின் உடலத்தை பார்வையிட்டதுடன், பெற்றோரையும் சந்தித்திருந்தார்.

இதன்போத தாம் வாழ்ந்து வந்த ஒலைக் குடிலாலேயே தமது பிள்ளை இறக்க நேரிட்டதாக பிள்ளையின் பெற்றோர் இராஜாங்க அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதே வேளை தமது பிரதேசத்தில் இருந்து வைத்தியார்லைக்கு செல்லும் பிரதான விதி குன்றும் குளியுமாக போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லை என்பது தொடர்பாகவும் தெரிவித்திருந்தனர்.

அச்சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் அந்த கிராமத்திற்கு தேவையான உதவிகளை பெற்றுக் கொடுப்பதாக தெரிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து அந்த கிராமத்திற்கு செல்லும் பகுதியில் பாலம் ஒன்றினை நிறுவுவதற்கான அனைத்து பூர்வாங்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தார்.

அந்த வாக்குறுதியின் மற்றுமொரு கட்டமாக உயிரிழந்த சிறுமியின் ஒலைக் குடிசைக்கு பதிலாக தேசிய விடமைப்பு அதிகர சபையினூடாக புதிய வீடு அமைத்துக் கொடுப்பதற்கான வேலை திட்டம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டு வீட்டிற்கான வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வாகரை பிரதேச செயலக உயரதிகாரிகள், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அதிகாரிகள், இராஜாங்க அமைச்சரின் செயலாளர்கள், பிரதேச இணைப்புச் செயலாளர்கள் உள்ளிட்ட மேலும் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

AGROMATES
2020

# Remembering



18th December 2021
Saturday

# Professor S. Raveendranath

Please join us as we honor Prof. Raveendranath on the **FIFTEENTH** anniversary of his passing.

**Toronto/Washington: 6.30 am**
**UK: 11.30 am**
**Netherlands/Norway: 12.30 pm**
**Nairobi: 2.30 pm**
**Sri Lanka: 5.00 pm**
**Sydney/Melbourne: 10.30 pm**
**New Zealand: 12.30 am Sun**

**Zoom Meeting ID**
**824 7236 6202**

Your presence will be very valuable and highly anticipated!